

**தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர்;**
**நீர் ஒருவரே தேவன் – சங்கீதம் 86:10**

## Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பிரார்த்தனையினால் ஒரே குடும்பத்தில் கர்த்தர் இயேசு செய்த மகத்துவமான அற்புதங்கள்




**எங்களுடைய அன்பு மகள் பெயர் ஜெசிகா.** அவள் மூன்று மாத குழந்தை யாக இருந்தபொழுது (2016) **Coloboma Hypotonia** என்னும் கொடிய வியாதி இரண்டு கண்களிலும் பரவினது. இந்த கொடிய வியாதியை மருத்துவர்களால் குணமாக்க முடிய வில்லை. இதனால் அவளுடைய மற்ற உறுப்புகள் வளர்ச்சி யற்றும் அவளுடைய பார்வையும் கெட்டுப் போயிற்று. எத்தனையோ மருத்துவர் களை பார்த்தும் ஒரு பிரயோஜனமும் இல்லை. பிள்ளை யால் நடக்கவும் முடியாது, விளையாடவும் முடியாது, பெற்றோரை புரிந்துகொள்ளவும் முடியாது. நாங்கள் குழந்தையை நினைத்து மிகவும் சோர்ந்து போனோம். குழந்தை ஜெசிகா இப்படித் தான் இருக்கும், எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படுவது அரிது என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். இந்நிலையில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஐதராபாத் வந்தபொழுது குழந்தையை தூக்கிக் கொண்டு வந்தோம். சகோதரன் குழந்தையை தனது மடியில் வைத்து குழந்தைக்காக உருக்கமாக ஜெபித்தார்கள். அதோடுகூட வியாதியை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொண்டார்கள். **இந்த சிறியரில் ஒருவனும் கெட்டுப்போவது பரம தந்தையின் சித்தமில்லை (மத்தேயு 18:14)** என்ற வேத வார்த்தையை சொல்லி ஜெபித்தார்கள். **அந்த நாளிலிருந்து குழந்தையின் சரீரத்தில் பெரிய முன்னேற்றம் காணப்பட்டது. குழந்தை நடக்க ஆரம்பித்தது, வீட்டை சுற்றி ஓட ஆரம்பித்தது, கண் பார்வையும் கிடைத்தது. ஜெசிகா மற்ற குழந்தைகளைபோல நார்மல் குழந்தையாக நர்சரி பள்ளியில் எல்.கே.ஜி. யூ.கே.ஜி. படிக்க ஆரம்பித்தாள். சங்கீதம் 1 மற்றும் 23ஐ மனப்பாடமாய் சொல்வாள். இது மருத்துவர்களே ஆச்சரியப்படும்படியாக, இயேசு சகோதரன் மூலம் செய்த மிகப் பெரிய அற்புதம்.**

**எங்கள் அப்பா திரு.பிரபுதாஸ்** அவர்கள் அன்பரின் ஊழியத்தை அதிகமாய் நேசிப்பவர்கள். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களால் நடத்தப்படும் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றுள்ளார்கள். கூட்டத்திலும் தவறாமல் பங்கு கொள்வார்கள்.

**என் மனைவி பெயர் கீர்த்திகா** அவர்களுடைய குடும்பத்தில் என் மனைவி மட்டும் இயேசுவை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தாள். இப்படிப்பட்ட நிலையில் மே 27, 2010ஆம் ஆண்டு எனக்கும் கீர்த்திக்கும் திருமணம் நடைபெற்றது. எங்களது திருமண வாழ்க்கை ஆசீர்வாதமாக சென்ற வேளையில், ஆகஸ்ட் 2019ஆம் ஆண்டு திடீரென்று என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. பரிசோதித்த பொழுது அவளுக்கு **S.L.E.** என்னும் கொடிய வியாதியும் அதோடு **Myositis** என்கிற கொடிய **Autoimmune Disorder** என்னும் வியாதி அவளை தாக்கியதை மருத்துவர்கள் கண்டுபிடித்தார்கள். அவள் வாழ்நாள் முழுவதும் மருந்து எடுக்க வேண்டும் என்றும், எடுத்தாலும் சரியாகாது என்றும் சொல்லிவிட்டனர். அவளுக்கு எப்பொழுதும் நாக்கு வறண்டுவிடும் இதனால் சாப்பிட முடியாது, உட்காரவும், எழும்பவும் முடியாது. எந்த கடினமான வேலையும் செய்ய முடியாது. அவள் மிகவும் பெலவீனமாக காணப்படுவாள். எப்பொழுது எலும்புகள் உடையும் அல்லது இரத்தப் புற்றுநோய் வரும் என்று தெரியாது. இந்நிலையில் என் மனைவிக்காக ஜெபிக்கும்படி சகோதரர் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் அழைத்து வந்தேன். அந்நேரம் அவளுக்கு பயங்கரமான காய்ச்சல்

இதன் தொடர்ச்சி 16 – ஆம் பக்கம் பார்க்க



## 08.02.2020-ல் மதுரையில் நடந்த கூட்டத்திலும் 17.01.2020ல் கோயம்புத்தூரில் நடந்த கூட்டத்திலும் Rev. Dr. A. ஜாஷ்வா அவர்களது பிரார்த்தனையினால் கர்த்தர் செய்த அற்புதங்கள்!

### தோள்பட்டை வலியிலிருந்து அற்புத சுகம் அருளின கர்த்தர்!



2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் தேதி இரு சக்கர வாகனத்தில் நான் சென்று கொண்டிருந்த பொழுது எதிர்பாராத விதமாக கீழே விழுந்து விட்டேன். எனது தோள் பட்டையில் பலத்த அடிபட்டது. உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர்ந்து மருந்து மாத்திரைகள் சாப்பிட்டு வந்தேன். எனினும் எனது தோள் பட்டை சரியாகாமல் மிகவும் வலியினால் கஷ்டப்பட்டு வந்தேன். எனது கைகளை தூக்க முடியாத நிலை. இந்நிலையில் ஜனவரி 17ம் தேதி கோயம்புத்தூரில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறுவதை அறிந்து நம்பிக்கையோடு கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் **"வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் உங்கள் சரீரத்தில் வேதனையுள்ள இடத்தில் உங்கள் கரங்களை வைத்து என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் இப்பொழுது சுகத்தை கட்டளையிடுவார்"** என்று கூறியவுடன். **"எனது கரத்தை வலியுள்ள தோள்பட்டையில் வைத்து கண்ணீரோடு சுகம் தாரும் ஆண்டவரே"** என்று ஜெபித்தேன். அந்த வேளையில் அற்புதமாக எனது தோள்பட்டை வலி நீங்கியது. எனது கைகளை உயர்த்தி பார்த்தேன், உயர்த்த முடிந்தது. கர்த்தர் அற்புதமாக எனது தோள்பட்டை வலியை நீக்கினார். சுகம் தந்த தேவனை துதிக்கின்றேன்.

**- திரு. மரியராஜ், கீழநத்தம், கோயம்புத்தூர்**

### வலது காதிலிருந்த குறைவு நீங்கி முழு சுகத்தைப் பெற்றேன்!



எனது வலது காது கேட்கும் திறன் இல்லாமல், எப்பொழுதும் ஒரு வித சப்தத்துடன் இருக்கும். இதனால் எனக்கு மிகுந்த கஷ்டமாக இருக்கும். இந்நிலையில் மதுரையில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் **"இங்கு ஒரு சகோதரி காதில் ஒரு பிரச்சனையோடு வந்திருக்கிறீர்கள், கர்த்தர் உங்களுக்கு அற்புத சுகத்தை தருகின்றார்"** என்று கூறினார்கள். அந்த வேளையில் ஒரு வல்லமை எனக்குள் இறங்கினதையும், ஏதோ ஒன்று எனது காதிற்குள் சென்று சரி செய்வது போல இருந்தது, அதன் பிறகு எனது காது பிரச்சனை நீங்கி நன்றாக கேட்கும் திறனை பெற்றது. நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக அவருக்கு நன்றி!

**- திருமதி. ஈஸ்வரி, மதுரை**

### எனது வேதனையை முற்றிலும் நீக்கிய அற்புத தேவன்!



எனக்கு தலைவலி, காது வலி மற்றும் கன்னம் வீங்கி மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். கோயம்புத்தூரில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் **வியாதியுள்ள மக்களுக்காக ஜெபித்த பொழுது கர்த்தர் அற்புத சுகத்தை எனக்கு தந்தார். வீங்கி இருந்த கன்னம் அந்த நேரமே வற்றிப் போய்விட்டது. தலைவலி, காது வலியும் நீங்கி அற்புத சுகத்தை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.** எனது வேதனையை மாற்றிய சர்வவல்ல தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்து கின்றேன்.

**- Sis. மல்லிகா, போத்தனூர், கோயம்புத்தூர்**




# அன்பரின் ஊழியம்

மலர்:7 ◆ அக்டோபர் 2021 ◆ இதழ் 10


## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

**கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது சங்கீதம் 34:10 (சங்கீதம் 34:1-9)**

கர்த்தர் தாமே உங்கள் அனைவருக்கும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், கிருபையையும், மனதுருக்கத்தையும், அவர்தம் அற்புத செயல்களையும் கொடுத்து உங்களை பெருகச் செய்வாராக.

அனுதினமும் நாங்கள் உங்கள் கண்ணீரின் விண்ணப்பங்களை கர்த்தருடைய சமூகத்தில் நினைவுபடுத்தி உங்களின் ஆறுதலுக்காகவும், ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காகவும், உங்கள் குடும்பத்தின் சமாதானத்திற்காகவும், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் ஊக்கமாய் ஜெபிக்கிறோம். நீங்கள் இன்னும் கிறிஸ்துவை அறிகிற அறிவினால் வளரவும் அவருடைய மகத்துவமான உயிர்த்தெழுதலின் வல்லமையை உணர்ந்துகொள்ளவும், அபிஷேகத்தை பெறவும், அதன் மூலமாய் நீங்களும், உங்கள் மூலமாக அநேகரும் ஆசீர்வதிக்கப்பட ஜெபிக்கிறோம். ஆவிக்குரிய, உலகப் பிரகாரமான, சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களினால் உங்களை ஆசீர்வதிப்பார்.

இப்பொழுதும் உலகில் நடக்கும் காரியங்கள் நமக்கு பயத்தை உண்டாக்குகிறது. இன்னும் இந்த ஊரடங்கு நீடித்தால் நம்முடைய பிழைப்பு, வருமானம், எதிர்காலம் எப்படி இருக்கும்? பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்த கலக்கம் உங்களுக்கு இருக்கலாம். எனினும் பயப்படாதீர்கள்! அனுதினமும் தேவனை தேடவும், அவரோடு பேசவும், வேதத்தை வாசிக்கவும், துதிக்கவும் கண்டிப்பாக ஒரு நேரத்தை ஒதுக்குங்கள். பவுல் அப்போஸ்தலர் சொன்னது போல ஆவிக்குரிய வாழ்வில் குழந்தைகளை போல இராமல் பலமுள்ள ஆகாரத்தை உட்கொண்டு கர்த்தருக்குள் திடநம்பிக்கையாக இருங்கள். பலமுள்ள ஆகாரம் என்பது கர்த்தருடைய வார்த்தையே.

பள்ளிகளும், கல்லூரிகளும் திறக்கப்பட்ட நிலையில் தேவன் உங்கள் பிள்ளைகளை கைவிடாமல் பாதுகாப்பார். அநேக பிள்ளைகள் ஆன்லைன் வகுப்புகளை புரிந்துகொள்வது மிகவும் கஷ்டம் என்று கூறுவதை நாங்கள் கேள்விப்படுகிறோம். எனவே சீக்கிரமாய் இந்த வாதை நோய் நீங்கவும், எல்லோரும் சுகமடைந்து தம்தம் வேலைக்கும், பள்ளிக்கும் செல்லவும் ஜெபம் செய்கிறோம். அநேகர் பணக் கஷ்டத்திலும், வியாபார முடக்கத்திலும் கஷ்டப் படுகிறீர்கள். மனம் சோர்ந்து போகாதீர்கள்! கர்த்தர் நிச்சயமாய் ஒரு நல்ல வழியை திறப்பார். குடும்பத்தில் சமாதானமின்றி தவிக்கிற மக்களுக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம். உலகில் நடக்கும் பேராபத்துகளை கண்டு அஞ்சாதீர்கள். கர்த்தர் உங்களை சுற்றி பெரிய அரணாக இருப்பார்.

ஊழியத்திற்கு உதவி செய்ய விருப்பம் உள்ளவர்கள் எங்களுக்கு எழுதுங்கள். உண்மையும், தாழ்மையும், ஜெப வாஞ்சையும் இருக்கும் மக்களாக இருந்தால் உடனே எங்களை தொடர்புகொள்ளுங்கள்.


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (**24** மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

அன்பரின் ஊழிய பங்காளர்களே! தொடர்ந்து ஊழியத்திற்காக ஜெபியுங்கள். இந்த கஷ்டமான காலத்தில் ஊழியத்தின் தேவைகள் அதிகமாக இருக்கிறது.

அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெறும் பணிகளுக்காகவும், S J Saves Trust அறக்கட்டளை பணிகளுக்காகவும், ஊழியம் இன்னும் வளர்ந்து பெருகவும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் பிள்ளை களையும் மற்றும் பேரப்பிள்ளை களையும் அதிகமதிகமாய் ஆசீர்வதிக்க ஜெபிக்கி றோம்.

மேலும் நமது கிராமப்புற மருத்துவமனை பணிகளுக்காகவும், அதின் வளர்ச்சிக்காகவும் ஜெபியுங்கள். நமது ஜெப ஸ்தல பராமரிப்பு வேலைகள் சீக்கிரத்தில் ஆரம்பிக்க இருக்கி றோம். தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். நம்முடைய ஸ்டூடியோவில் அநேக பொருட்கள் மிகப் பழமையாகி விட்டது. அதில் புதுப்புது முன்னேற்றங்கள் செய்ய வேண்டி உள்ளது.

சமூக ஊடகங்களில் ஒளிபரப்பபடும் நிகழ்ச்சி களை தவறாமல் பாருங்கள். (Youtube & Facebook).

எங்களை சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் முன்அனுமதி பெற்று எங்களை சந்தியுங்கள். **(94888 45627 & 0431-2765386)** திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திருச்சியிலுள்ள ஜெப ஸ்தலத்திற்கு வந்து நீங்கள் ஜெபித்து செல்லலாம்.

இந்த ஊழியத்தை ஜெபத்தினாலும், காணிக் கையினாலும் தாங்குகின்ற உங்கள் ஒவ்வொரு வருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவிக்கின் றோம். வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்ல தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களுக்காக தொடர்ந்து எங்கள் ஜெபங்களில் ஜெபிக்கிறோம்.

**இம்மாத வாக்குத்தத்தம்**

**சங்கீதம் 32:8; 86:10**
**எரேமியா 33:3;**
**ஏசாயா 32:2**

## இதயம் தொட்ட எண்ணம்

**சில அற்புதங்கள் பெரும் ஆசீர்வாதங்களை இவ்வுலகில் கொண்டுவரும்,**
**சில நற்கிரியைகள் பெரும்பலன்களை மறுவுலகில் கொண்டு வரும்.**

**TINY MIRACLES BRING GREAT BLESSINGS IN THIS LIFE**
**TINY GOOD DEEDS BRING GREAT REWARDS IN ETERNITY.**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 9500487061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 9500487061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.



# விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்

**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

மெய்யான தேவன் மேல் உள்ள விசுவாசத்தில் உறுதியாயிருக்கும் விசுவாச பெருமக்களே! எல்லாவற்றையும் நமக்கு செய்ய வல்லவராய் இருக்கிற நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவனுடைய அளவற்ற கிருபையும், அவர் தரும் சமாதானமும் இயேசுவின் இனிய பிரசன்னமும், அற்புத செயலும், பரிசுத்த ஆவியானவர் தரும் ஆறுதலும், கிருபை வரங்களும் உங்கள் வாழ்வில் அளவில்லாமல் பெருகுவதாக!

பிரியமானவர்களே! எப்பக்கத்திலும் பலவித கஷ்டங்கள், துயரங்கள், வியாதிகள், எதிர்பாராத விபத்துக்கள், மனச்சோர்வுகள், நஷ்டங்கள், ஒருவித தனிமை உணர்வுகள், தீராத பிரச்சனைகள், பயங்கள், சத்துருவின் போராட்டங்கள், சமாதான குறைவு நம்மை சூழ்ந்து காணப்படுகிறது. இத்தகைய கஷ்டமான காலத்தில், உங்களுக்காக நான் பல நாட்கள் ஜெபித்து, தேவ சமூகத்தில் காத்திருந்தப்பொழுது பரிசுத்த ஆவியானவர் எனக்குக் கொடுத்த வேதவசனம்,

**நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்**

**- மாற்கு 9:23**

இயேசுகிறிஸ்து உலகில் வாழ்ந்தபொழுது எந்த சந்தர்ப்பத்தில் இந்த வசனம் அவரால் கூறப்பட்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும். எளிய மனிதன் ஒருவன் இயேசுவிடம் வந்து **ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டு வந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைதள்ளி, பல்லைக் கடித்து, சோர்ந்து போகிறான்.** என்று கூறினார். இந்த நிகழ்வுக்கு முன்பு இயேசுகிறிஸ்து உயர்ந்த ஒரு மலைக்கு பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் அழைத்துக் கொண்டு போய் அங்கு அவர்கள் முன் மறுரூபமாகின்றார். அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசிகிறவர்களாக அவர்களுக்கு காணப்பட்டார்கள். **(மத்தேயு 17:1-6; லூக்கா 9:28-36)** இயேசு கிறிஸ்து அந்த மகிமையான அனுபவத்திற்கு பின்பு மீண்டும் ஒரு சாதாரண மனிதன் போலவே மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறார். அப்பொழுது ஒரு மனிதன் சீஷர்களை குறித்து கேள்விப்பட்டு மகனை அழைத்து வருகிறார். அந்த தகப்பனுடைய மனதில் பலவித சந்தேகங்கள் வருகிறது. கர்த்தரோடு நெருங்கி உள்ள சீஷர்களால் அவரது தம் மகனை குணமாக்க முடியவில்லையே! இயேசு குணப்படுத்துவாரா? என்று தன் மனதில் எண்ணியபடியே, மகனை அழைத்துக் கொண்டு இயேசுவிடம் வருகிறார். உண்மையாகவே இயேசு கிறிஸ்து ஏராளமான பலத்த அற்புதங்கள், அதிசயங்களை செய்தாலும், இந்த மனிதன் அரைகுறையாக விசுவாசித்தபடியால் இயேசு அவனை பார்த்து **"நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்"** என்று கூறுகிறார். அப்பொழுது அந்த மனிதன் தன்னை தாழ்த்தி **"ஆண்டவரே! என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிடும்"**என்று கண்ணீரோடு சத்தமிட்டு சொல்கிறான். இந்த ஏழை தகப்பனின் தாழ்மையையும், கதறுதலையும் இயேசு பார்க்கிறார். உடனே இயேசு அவன் மீது மனமிரங்கி, அசுத்த ஆவியின் கட்டுகள் மற்றும் அலைக்கழிப்பிலிருந்து, அவன் மகனை பரிபூரணமாய் விடுதலையாக்குகிறார். அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் செல்கிறார்கள்.

சமீபத்தில் நான் ஒரு கிராமத்திற்கு சென்றபொழுது ஒரு சகோதரன் என்னை குறித்து கேள்விப்பட்டு, அங்கு ஜெபத்திற்கு வந்திருந்தார். தன்னுடைய வாலிப தம்பியைக் குறித்து என்னிடம் கூறினார். அவன் திடீரென்று கைகால் செயல்படாமல், உட்கார்ந்த நிலையிலேயே இருக்கிறான், அவனால் படுக்கவும் முடியாது, எழும்பவும் முடியாது என்றார். அது மட்டுமல்லாமல் வேறு ஒரு வார்த்தையும் என்னிடம் சொன்னார். அது எனக்கு மிகுந்த அதிர்ச்சியை தந்தது. நாங்கள் கர்த்தரை அறிந்தவர்கள். எனினும் இவ்வளவு பெரிய சோக சம்பவம் நடந்த பிற்பாடு நாங்கள் விசுவாசத்தை விட்டு விலகி வேறு ஒரு மார்க்கத்திற்கு போய்விட்டோம் என்று கூறினார். நான் அவரிடம் **"நீங்கள் பல இடங்களுக்கு அவனை அழைத்து சென்றிருந்தும், அங்கெல்லாம் அற்புதம் நடந்ததா?"** என்று கேட்டதற்கு பல லட்சங்கள் செலவானதே தவிர ஒரு பிரயோஜனமும் இல்லை என்று சொல்லிவிட்டு **"நீங்கள் ஏதாவது செய்ய முடியுமா"** என்றார். அப்பொழுது நான், இயேசு கிறிஸ்து கூறிய அதே வார்த்தையை சொன்னேன். நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் **(மாற்கு 9:23)** ஆனால் அந்த சகோதரன் ஒன்றும் சொல்லாமல் துக்கத்தோடு போய்விட்டார்.

ஆம் பிரியமான தேவ ஜனமே! இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் இம்மைக்குரிய அற்புத அடையாளங்கள், நல்ல வேலைகள், பதவி உயர்வு, நிறைய பணம் கிடைக்க, வீட்டிற்காக, திருமண காரியத்திற்காக மாத்திரம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். ஆனால் **எபிரெயர் 10:39-ன்படி ஆத்துமா ஈடேற விசுவாசிப்பதில்லை.** ஆசீர்வாதங்கள் உண்டாகும்போது தேவனை மறந்து விடுகிறார்கள் அல்லது ஒன்றுமே நடக்காத பொழுது சோர்ந்து போய் விழுந்து விடுகிறார்கள். **"ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ"** என்று **லூக்கா 18:8** சொல்கிறது. நம்முடைய விசுவாசம் அப்படி இருக்கக் கூடாது. அது உறுதியானதாக இருக்க வேண்டும். **"தன் விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்" (ஆபகூக் 2:4; கலாத்தியர் 3:11)** என்று வேதம் கூறுகிறது. இனி நாம், நம்முடைய விசுவாசம் யார் மேல் இருக்க வேண்டும்? எவைகளின் மேல் இருக்க வேண்டும்? அது எப்படி இருக்க வேண்டும்? என்றும், இப்படி உண்மையான விசுவாசம் இல்லை என்றால் நமக்கு என்ன நேரிடும் என்பதையும் இச்செய்தியில் நாம் பார்ப்போம்.

## ஆபிரகாமின் விசுவாசம்

ஆபிரகாமின் விசுவாசத்தை நாம் சற்று யோசித்து பார்க்க வேண்டும். **ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக என்னப்பட்டது (ஆதி. 15:6; யாக்கோபு 2 :23)** என்று வேதம் கூறுகிறது. ஆபிரகாம் தேவனை எப்படி விசுவாசித்தான் என்று சற்று சரித்திர பூர்வமாக ஆராய்வோம்.

1. யூத சரித்திரம் மற்றும் அகழ்வாராய்ச்சியின்படி ஆபிரகாமின் தகப்பனாகிய தேராகு, நிம்ரோத் என்னும் பேரரசனுக்கு கீழ் அவர்கள் வழிபட்டு வந்த வானமண்டல, நட்சத்திரங்களின் தொழுகைக்கு தலைவனாக இருந்தான். அங்கு சிலநேரங்களில் பலவிதமான பலிகள் கொடுக்கப் பட்டது. நர பலிகளும் இதில் அடங்கும். தேராகின் முதல் குமாரன் ஆரான். அவன் பிறந்து 31 வருடம் கழித்து தான் ஆபிரகாம் பிறந்தான். ஆபிரகாம் தன் தாயின் வயிற்றில் இருக்கும் பொழுது பேரரசன் நிம்ரோத் ஒரு கனவு கண்டான். அந்த கனவில், ஆபிரகாமின் சந்ததியில் பிறந்த ஒருவன் நிம்ரோத்தை கொல்கிறான்! என்பதே. (கனவின்படி ஆபிரகாமின் சந்ததியில் பிறந்த ஏசா நிம்ரோதை கொன்று போட்டான் என யாசேரின் புத்தகத்தில் காணப்படுகிறது) கனவில் நடந்ததைக் கண்டு பயந்த நிம்ரோத் பேரரசன் ஆபிரகாமை நரபலி கொடுக்க வேண்டும் என்று தலைமை பொறுப்பில் இருந்த தேராகுவிடம் கூறுகிறான். தேராகு ஆபிரகாமின் தகப்பனாக இருந்தபடியால் தன் குமாரனை பலியிட விரும்பாமல் தன் வேலைக்காரனின் குமாரனை பலியிட கொடுத்ததாக சரித்திரம் கூறுகிறது.

இந்த நிலையில் தேராகு, தன் மகன் ஆபிரகாமை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருந்தான். அவனுக்கு 10 வயதாக இருக்கும் பொழுது அவனை மேலும் ஒளித்து வைக்க முடியாமல், நோவா தாத்தாவிடமும் அவன் குமாரன் சேமிடத்திலும் அனுப்பி வைக்கப்படுகிறான். அங்கே ஆபிரகாம் பல வருடங்கள் காப்பாற்றப்பட்டு

உன்னதமான தேவனை பற்றி அறிந்துக் கொள்கிறான். வான சாஸ்திரங்களையும் கற்றுக் கொள்கிறான். இது சேம் எழுதின தோல் சுருளில் காணப்படுகிறது. இவையே ஆபிரகாம் தேவனை பற்றிய அறிவில் வளர்ந்த உண்மையான சரித்திரம். பிற்பாடு ஆபிரகாம் தேவனை தொழுதுகொள்ளும் பொழுதெல்லாம் தன் கரங்களை வானத்திற்கு நேராக நீட்டி பரிசுத்தத் தோடும், உண்மையோடும், முழு பெலத்தோடும் தொழுது வந்தான். பல சமயங்களில் பரலோக தேவனை நோக்கி தாழ விழுந்து ஜெபம் செய்தான். அவன் குறிப்பிட்ட வருடங்களுக்கு பிற்பாடு (அவனது 49ஆம் வயதில்) தன் தகப்பன் வீட்டிற்கு வந்தபொழுது தகப்பன் சொன்ன காரியங்களை ஆபிரகாம் செய்யவில்லை. ஆகவே நிம்ரோத் என்னும் பேரரசன் பயங்கரமான வெப்பம் உள்ள எரிகிற அக்கினி சூளையில் போட்டான். அந்த அக்கினி சூளை ஆபிரகாமை ஒன்றும் செய்யவில்லை. தலைமுடி கூட கருக வில்லை. எனினும் அவனை சுற்றி கட்டின கயிறுகள் சாம்பலாயின. ஆபிரகாம் அந்த பயங்கர அக்கினி சூளையில் மூன்று நாட்கள் இரவும் பகலும் ஒரு சேதமும் இல்லாமல் இருந்தான். ஏனெனில் அந்த எரிகிற அக்கினிக்குள் இயேசு மூன்று நாட்கள் அவனோடு நடமாடுவதை நிம்ரோத் கண்டு அவனை விடுதலையாக்கி அவனுக்கு ஏராளமான வெகுமதி களையும், எலியேசர் என்னும் பிரதான வேலை யாளையும் மற்றும் இரண்டு பெரிய பரிவாரங்கள் உள்ள ஆடுமாடுகளையும், பணியாட்களையும் கொடுத்தான் என்று சரித்திரத்தில் பார்க்கிறோம். இது தான் ஆபிரகாமின் முதல் விசுவாசம்.

2. கர்த்தர் அவனை தெரியாத இடத்திற்கு போகச் சொன்ன பொழுது அவரை நம்பி அவன் போகிறான். தன்னுடைய தேசமாகிய ஊர் (இப்பொழுது ஈராக்) முதல் கானான் தேசம் வரைக்கும் பயங்கரமான மணல், வனாந்தரங்களில் அலைந்து திரிகிறான். நிம்ரோத்தும் அவன் குடிமக்களும் செய்த கொடுமைகள், தீமைகள், தேவனுக்கு விரோதமான காரியங்களுக்கு தன்னை தப்புவித்து, பாதுகாத்த தேவனுக்கு பயந்து, தூய்மை யான விசுவாசத்தில் வாழ்க்கையை நடத்துகிறான். **(எபிரெயர் 11: 8,9)**

3. ஆபிரகாமிற்கு வயதாகியும் குழந்தை யில்லை. இருப்பினும் ஆபிரகாம் உன்னதமான தேவன் தனக்குக் கொடுத்த வாக்குத்தத்தமாகிய சந்ததிகள் அவனுக்குள் தோன்றும் என்பதை விசுவாசிக்கிறான். குழந்தை பெற எந்தவிதமான வாய்ப்பும் சரீரபிரகாரமாக இல்லாத பொழுதும் இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல அழைக்கிற தேவனை நம்பி, 25 வருடம் ஈசாக்கை பெற விசுவாசத்தோடு காத்திருக்கிறான். **(ஆதி. 15: 1-5; ரோமர் 4:17 22)**

4. தேவன், ஈசாக்கை தகனப்பலியாக பலியிடும்படி ஆபிரகாமிடம் சொன்ன பொழுது, அவன் தன் மகனை பலியிடுவதற்கும் தயங்க வில்லை. தேவனால் மீண்டும் தன் மகனை எழுப்ப முடியும் என்று ஆபிரகாம் நம்புகிறான். அவன் விசுவாசத்தை பார்த்த தேவன், ஈசாக்கை கொல்லவிடாமல் ஒரு ஆட்டை காண்பித்து பலியிட சொல்கிறார். **(ஆதி. 22 :1-18)**

5. ஆபிரகாம் உண்மையான தேவனை வழிபட்டு கொண்டிருப்பதோடு, தன்னுடைய வேலைக்காரர் களுக்கும் உன்னதமான தேவனை வழிபடுவதற்கு கற்றுக் கொடுத்தான் என்று சரித்திரம் சொல்கிறது. அவன் ஒட்டகத்தின் தோலால் செய்யப்பட்ட ஐந்து அடுக்கு கூடாரங் களில் வசித்தான். முதல் உயர்ந்த அறையில் அவனும், சாராளும் இருந்ததாகவும், மற்றுமொரு அடுக்குகளில் வேலைக்காரர்கள் இருந்ததாகவும், தரையில் உள்ள கூடாரத்தில் சில முக்கியமான பொறுப்பில் உள்ள வேலைக்காரர்களும் இருந் தார்கள். சேமிடத்தில் கற்ற வானசாஸ்திரங்கள் மற்றும் கணக்குகளை, கானானுக்குள் செல்லும் வழியில் ஆபிரகாம் சொல்லிக் கொடுத்ததாக சரித்திரம் சொல்கிறது. ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கிற்கும் சர்வ வல்லமையுள்ள ஒரே தேவனைப் பற்றி சொல்லிக் கொடுக்க அவன் தவறியதே இல்லை. இதனால் தான் இன்றைக்கும் ஆபிரகாம் விசுவாசி களின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறான். **(கலாத்தியர் 3:6 9; ஆதி. 18: 19).**

அன்பான சகோதர, சகோதரிகளே! ஆபிரகாமை தேவன் எல்லாவற்றிலும் ஆசீர்வதித்தது போல இந்த இக்கட்டான காலத்தில் உங்களையும் அவர் ஆசீர்வதிப்பார். நாம் இயேசு கிறிஸ்துவை நம்ப வேண்டும். ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் தாய் என்று அழைக்கப் படுகிற மரியாளும், அவளுக்கு நியமிக்கப்பட்ட யோசேப்பும் ஒன்று கூடி இயேசு பிறக்கவில்லை. பரிசுத்த திருமணத்திற்காக அவர்கள் காத்திருந்த

பொழுது தேவன் மரியாளுடைய வயிற்றில் மாம்சத்தில் வெளிப்படுகின்றார். **(1 தீமோத்தேயு 3:16)** பரிசுத்த ஆவியானவரின் மகா வல்லமை மரியாள் மீது இறங்கியது. உன்னதமானவரின் பெலன் அவருக்குள் வந்தது. அப்படித்தான் இயேசு தோன்றினார். அவர் உலகில் வாழ்ந்தபொழுது தன்னை தேவன் என்று நிரூபிக்க தவறியதே இல்லை. ஆயிரக்கணக்கான மக்கள் அவரை பின்பற்று கிறார்கள். அவர் செய்த அற்புதங்களை கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். தேவன் ஒருவரை தவிர இந்த அற்புதங்களை யாரும் செய்ய முடியாது என்று இஸ்ரவேலில் போதகனாயிருந்த நிக்கொதேமு அவரை குறித்து சாட்சி பகர்கிறான். கயவர்கள் இயேசுவை பிடித்து சிலுவையில் அறையும் பொழுது கூட கவர்னர் பிலாத்து அவரிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை என்று கூறுகிறார். அவரை விரோதித்த ஏரோதும் அதை தான் கூறுகிறார். நூற்றுக்கு அதிபதியும் இவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன் என்று கூறுவதை நாம் பார்க்கிறோம். **(மாற்கு 15:39)** இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயமாய் விழுங்கி உயிர்த்தெழுந்ததைக் குறித்து அநேக போர்வீரர்கள் சாட்சி பகர்வதை காண்கிறோம். மகதலேனா மரியாள், சீஷர்கள் மற்றும் 500-க்கும் மேற்பட்டவர்களுக்கும், அதற்கு பிற்பாடு பவுலுக்கும், அப்போஸ்தலருக்கும் உயிரோடு இருப்பவராக இயேசு தரிசனமானார். **(அப். 1:3)** பல வருடங்கள் கழித்து அவருடைய அன்பு சீடன் யோவான் பத்மு தீவில் கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபட்ட பொழுது அவருக்கும் காட்சி தருகிறார். **(வெளி. 1:13-20)** **இந்த 2021ம் ஆண்டிலும் தம்மை உண்மையாக தேடுகிறவர்களுக்கு உயிரோடு இருப்பவராக, மாட்சிமை பொருந்திய, சர்வ வல்லமையுள்ள தேவனாகவும், எவ்விதமான இக்கட்டான நிலையையும் மாற்றக் கூடியவராகவும் இயேசு காட்சி அளிக்கிறார்.**

## யோனாவின் விசுவாசம்

யோனாவின் வாழ்க்கையை பாருங்கள். கர்த்தர் யோனாவை அழைத்து, நீ நினிவே பட்டணத்திற்கு சென்று, அதற்கு விரோதமாய் பிரசங்கி என்று கூறினார். யோனாவிற்கு அது பிடிக்க வில்லை. அசீரியர்கள் இஸ்ரவேலர்களை அதிகமாய் துன்பப்படுத்தினார்கள். எனவே இவன் பயந்து தர்ஷீசுக்கு செல்கிறான். அங்கு இவன் சென்ற கப்பல் பெரும் சூறாவளியால், கடல் கொந்தளிப்பில் சிக்குகிறது. இதற்கு என்ன காரணம் என்று யோனாவிடம் விசாரிக்கிறார்கள். யோனாவோ மெய் தேவனை மறுதலியாமல், என்னுடைய கீழ்ப் படியாமையின் நிமித்தம் கர்த்தர் என் பயணத்தை தடுத்தார் என்று கூறி, ஆழ்கடலில் தன்னை தூக்கிப் போடுங்கள் என்று கூறுகிறான்.

பிரியமான தேவ ஜனமே! யாராவது இந்த ஆபத்தான நிலையில் இப்படி சொல்வார்களா? காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று தானே கூக்குரல் இடுவார்கள். அதன் பிறகு யோனாவிற்கு சம்பவித்தது என்னவென்பது உங்களுக்கு நன்றாக தெரியும். அந்த காலத்தில் நினிவே பட்டணத்து ஞானிகள் யோனாவினிடத்தில் எப்படி உங்களுக்கு இந்த துணிவு வந்தது என்று கேள்வி கேட்டார்களாம். சரித்திர உண்மையின்படி யோனா சாரிபாத் ஊர் விதவையின் மகனாக இருந்தான். இந்த மகனை தான் நோய்வாய்பட்டிருந்தபொழுது எலியா எழுப்பினான். அவன் தகப்பன் அமீத்தாய்-ஐ, யேசபேல் என்னும் கொடூரமான ஆகாப் ராஜாவின் மனைவி கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும், பிள்ளைகளையும் கொலை செய்யும்பொழுது இவரையும் கொலை செய்ததாக யூத சரித்திரம் சொல்கிறது. எனவே யோனாவிற்கு இந்த துணிச்சல் எப்படி வந்தது என்றால் மரித்துப் போன தன்னை எலியா எழுப்பினாரே, அப்படியானால் என்னை கடலில் தூக்கிப் போட்டால் தேவன் எப்படியும் என்னை மீட்டெடுப்பார் என்ற விசுவாசம் அவனுக்குள் இருந்தது. அதற்காக இதைப் படிக்கின்ற நீங்களும் கடலில் வீழ்ந்து, நெருப்பில் வீழ்ந்து தேவனை பரிசோதிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. சற்று சிந்தித்து பாருங்கள்! யோனா துணிச்சலான காரியத்தை செய்கிறதை இங்கே நாம் பார்க்கிறோம். ஏனென்றால் அவன் பொய்யான மாயைகளை பின்பற்றுகிறவர்களை பின்பற்றாமல் கர்த்தரையே தன் தெய்வமாக கொண்டிருந்தபடியால் தேவன் அளவற்ற கிருபையை அவனுக்கு அருளுகிறார் **(யோனா 2:8,9)** தேவன் பெரிய மீனுக்கு கட்டளையிட்டு அவனை மீண்டும் கரை சேர்க்கிறார்.

ஆம் அன்பானவர்களே! பரலோகத்தில் வாழும் உன்னதமான தேவனை ஏறெடுத்து

பார்ப்பவர்களும், முழங்கால் படியிட்டு தொழுது கொள்பவர்களும்,முழு இருதயத்தோடு அவரை விசுவாசித்து, பரிசுத்த ஆவியாக இருக்கிற அவரை அனுதினமும் ஆராதிப்பவர்களும் மிகவும் சிலரே. இதன் நிமித்தமாக தான் உன்னதமான தேவன் தம்மை தொழுது கொள்ளாதவர்களை பலவித தீமையான காரியங்களுக்கு ஒப்புக் கொடுப்பதை நாம் பார்க்கிறோம். **(ரோமர் 2:24-39)** ஆனால் அழிவில்லாத, உன்னதமான பரலோகத்தில் வாசம் செய்யும் மெய்யான தேவனை எவ்விதமான கஷ்டங்கள் வந்தாலும் மறுதலியாமல் விசுவாசிப்பவர்களுக்கு அவர் நல்லவராகவே இருக்கிறார். இந்த மகத்துவமான தேவத்துவம், நாம் காண்கிற வான மண்டல நட்சத்திரங்கள், இயற்கைகள், தேவன் தந்த மனசாட்சி மற்றும் அவர் கொடுத்த ஆழ்ந்த அறிவினால் அவரை தெளிவாக அறிய முடிகிறது. யாருமே போக்குச் சொல்ல இடமில்லை.

இன்று அநேக ஞானிகள் தங்களை மிகுந்த அறிவுள்ளவர்கள் என்று நினைத்து, உன்னதமான தேவனை, லூசிபர் செய்தது போல ஆராதியாமலும், ஸ்தோத்தரியாமலும் இருந்து, உணர்வில்லாதவர்களாய், மனசாட்சியை கடினப்படுத்தி, சிருஷ்டியை தொழுது, சிருஷ்டிகரை மறந்து விடுகிறார்கள். இந்த காலத்தில் ஜனங்கள் தங்களுடைய சிறிய மூளையில் இருக்கும் அறிவு தான் பெரியது என்றும், தாங்கள் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகள் தான் மிக சிறந்தது என்றும் கூறுகின்றனர். **இவர்கள் நிச்சயம் நித்திய ஆக்கினையை அடைவார்கள். (ரோமர் 1: 19-32)**

## என்னுடைய விசுவாச அனுபவங்கள்

**நான் ஒரு சமயம் வடஇந்தியாவிற்கு சென்றிருந்தேன். நான் தங்குவதற்கு நல்லதொரு இடத்தை ஒழுங்கு செய்திருந்தார்கள். ஆயிரக் கணக் கான மக்கள் கூட்டங்களுக்கு வந்தார்கள். நன்கு படித்த, ராணுவத்தில் உயர் பதவியில் இருக்கும் ஒரு அதிகாரியும் வந்திருந்தார். அங்கே என்னை வரவழைத்த ஒரு பாஸ்டருடைய தாய் நான் சொன்ன குறிப்புகளை கவனமாய் கேட்டு அதற்கு ஏற்றபடி தமிழ்நாட்டு உணவை எனக்கு ஏற்ற விதமாக தயார் செய்தார்கள். அவர்கள் தந்த அன்பு நிறைந்த உணவினால் என் சரீரத்தில் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. எனினும் கடைசி நாளில் அந்த அருமையான தாய் மிகவும் ஆசை பட்டு விலையுயர்ந்த ஒரு மீனை நான் கண்டிப்பாக சாப்பிட வேண்டும் என்று வற்புறுத்தினார். (பொதுவாகவே நான் வெளியூர்களுக்கு செல்லும் பொழுது குறிப்பிட்ட ஒரு மீனை தவிர மற்ற எந்த மீனையும் சாப்பிடுவதில்லை) நான் மிகவும் பலவீனன் என்பதால் பல நிபந்தனைகளை சமைப்ப வரிடத்தில் கூறியிருந்தேன். எனினும் அங்குள்ள தாய் சொல்கிறாரே என்று அந்த வறுத்த விலை உயர்ந்த மீனில் ஒரு அரை சென்டிமீட்டர் அளவு மாத்திரம் எடுத்து ருசி பார்த்தேன். பிற்பாடு ஜெபத்தில் தரித்திருந்து நான் என்னை ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். அப்படி ஆயத்தம் செய்த பொழுது ஒரு குரல் கேட்டது. "மகனே நீ மிகவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படுவாய், மரிக்கும் நிலைக்கு செல்வாய். எனினும் நான் உன்னோடு இருக்கிறேன். இங்குள்ள எந்த மருத்துவ மனையிலும் சேர்ந்து சிகிச்சை எடுக்காதே, உன் வீட்டிற்கு போகும் வரைக்கும் உன்னோடு நான் இருப்பேன்" என்ற வார்த்தை எனக்கு கேட்டது. குரல் எங்கிருந்து வருகிறது என்று பார்த்தபொழுது அங்கே இயேசு நின்று கொண்டிருந்தார். பொதுவாக நான் கூட்டத்திற்கு செல்லும் முன் இயேசு வராமல் மேடையில் ஏறவே மாட்டேன். இயேசு வரவில்லை என்றால் அந்த கூட்டத்தை ரத்து செய்து விடுவேன். அப்பொழுது இயேசுவிடம் "நான் நன்றாக தானே இருக்கிறேன், இரண்டரை நாட்களாக என் வயிறு எந்த தொந்தரவும் செய்யவில்லையே" என்றேன். ஆனால் சிறிது நேரத்தில் மேடை ஏறி ஆங்கிலத்தில் அல்லேலூயா என்ற கோரஸை பாட ஆரம்பித்த பொழுது என் வயிறு பிரச்சனை செய்ய ஆரம்பித்தது. வயிறு ஒவ்வாமை சில நிமிடத்தில் அதிகரித்தது. எனக்கு உதவி செய்கிற ஜான்சன் எப்பொழுதும் எனக்கு தேவையான மருந்துகளை வைத்திருந்தான். ஒரே நேரத்தில் Antibiotic, anti diarrhoea, anti food poison-க்குரிய மாத்திரைகளை எட்டு முதல் பத்து வரை எடுக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால் அடுத்த ஐந்து நிமிடத்தில் நான் செய்தி தொடங்க வேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் அற்புதங்களுக்காக காத்திருக்கிறார்கள். கர்த்தரை முழு மனதுடன் விசுவாசித்து, தேவ செய்தியை கொடுத்**

தேன். கூட்டத்தில் குருடர்கள் பார்வை பெற்றனர், செவிடர்கள் கேட்கும் திறனை பெற்றனர், இயேசு இருந்த காலத்தில் நடந்த அத்தனை அற்புதங்களும் நடந்தது. ஆனால் நானோ மிகவும் கஷ்டப்பட்டு கூட்டத்தை முடித்து அத்தனைப் பேருக்கும் தனிஜெபம் செய்துவிட்டு, கர்த்தரை ஸ்தோத்தரித்து கொண்டு தங்கும் அறைக்கு வந்தேன். அவ்வளவு தான் பல முறை வாந்தி எடுத்து, வயிற்று போக்கு ஏற்பட்டு, மிகவும் ஆபத்தான நிலைக்கு வந்தேன். உடனே என்னை மருத்துவமனையில் சேர்க்கும்படி சொன்னார்கள். ஆனால் நான் கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, மருத்துவமனைக்கு செல்லாமல், விமானத்தில் பயணம் செய்து திருச்சி வந்து சேர்ந்தேன். என்னால் நடக்க முடியாத காரணத்தினால் வீல் சேரில் உட்கார்ந்தபடி வீடு வந்து சேர்ந்தேன். மரணத்திற்கு நேராக ஓடிக் கொண்டிருந்தேன். வீட்டிலேயே இருந்தபடி டிரிப்ஸ் போட்டு இருந்தேன். என்னுடைய வழக்கத்தின்படி நான் எழும்பி ஜெபிக்கிற அதிகாலை நேரம் மூன்றரை மணிக்கு (மயக்க நிலையில் இருந்தேன்) ஒருவர் என் படுக்கையில் உட்கார்ந்தது போல இருந்தது. அவர் அழகான Purple நிற நீண்ட ஆடை அணிந்து கொண்டிருந்தார். எனக்கு அந்த நபர் யார் என்று தெரியவில்லை. ஆனால் மிகுந்த ஒரு சமாதானம் எனக்குள் ஆட்கொண்டது. அவரிடம் யார் என்று நான் கேட்டபொழுது, அவர் தமது காயம்பட்ட கரங்களை காண்பித்து என் வயிற்று பகுதியை தடவினார். **"மகனே, அழாதே! உனக்கு இனி சிகிச்சை தேவையில்லை நான் உன்னை சுகமாக்குகிறேன"** என்றார். அவ்வளவுதான் இரண்டு நாட்களாய் நான் பட்ட மரண வேதனை நொடிப் பொழுதில் மறைந்தது.

ஒரு சமயம் நான் ஒரு குறிப்பிட்ட நகரத்திற்கு செய்தி கொடுக்க சென்றேன். அங்கு ஒரு அன்பு சகோதரர் எனக்கு உதவி செய்ய முன்வந்தார்கள். பலவிதங்களில் எனக்கு உதவி செய்தார். நான் சற்றும் தயங்காமல் **"நீங்கள் ஏன் எனக்கு இப்படி உதவி செய்கிறீர்கள்"** என்று கேட்டேன். அப்பொழுது அவர் "நான் எம்.டெக். படித்த ஒரு பட்டதாரி. ஒரு பெரிய கான்ட்ராக்ட் முதலாளியிடம் நல்ல சம்பளத்தில் வேலை செய்கி றேன். ஆனால் என் குடும்பம் ஒரு வைராக்கியமான கொள்கையை பின்பற்றும் குடும்பம். அந்த கொள்கை நம்பிக்கைக்கு ஏற்றபடி நானும் பலவிதமான காரியங்களை மேற்கொண்டேன். நான் படிக்க படிக்க எனக்குள் பல கேள்விகள் எழும்பினது. இந்த கேள்விக்கு விடை காண (எனக்கு இயேசுவை பற்றியும், மெய்யான தேவனை பற்றியும் தெரியாது, கேள்விப்பட்டதும் இல்லை) அநேக நாட்கள் அழுது போராடினேன். நான் நம்புவது சரிதானா? இவைகளுக்கு எல்லாம் மேலே ஒரு உன்னதமான தேவன் இருக்க வேண்டும் என்று எண்ணி ஒரு நாள் வீட்டு மாடியிலிருந்து நட்சத்திரங்களை பார்த்துவிட்டு கீழே வந்து அந்த நட்சத்திர மண்டலங்களை பற்றிய உண்மைகளை கற்றேன். அப்பொழுது தான் எனக்கு உண்மையான அறிவு வந்தது. இந்த வான மண்டலங்களில் உள்ள நட்சத்திரங்கள் எல்லாம் தன் தன் பாதையில் சரியாக செல்கிறது. மனிதனுக்கு எட்டாத பயங்கரமான உஷ்ணமான அக்கினி கடல், வாயு மண்டலங்கள் காணப்படுகிறது. மைனஸ் டிகிரியில் பனிக்கட்டிகளும் காணப்படுகிறது. இவைகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளாமல் தன் தன் பாதையில் சரியானபடி பயணிக்கிறது. இவற்றை யெல்லாம் நேர்த்தியாக நடத்துகிற நம் தேவாதி தேவன், அனைத்தையும் உருவாக்கின உன்னத மான தேவனாக இருக்க வேண்டும் என்று அறிந்தேன். உடனே என்னையும் அறியாமல் ஒரு நாள் மாடிக்கு சென்று என் கரங்களை உயர்த்தி உன்னதங்களில் இருக்கும் சர்வேஷ்சுரா, மகா மகா பரிசுத்த தேவனே எனக்கு காட்சியளியும் என்று மிகுந்த தாழ்மையுடனும், கண்ணீருடனும் ஜெபித்தேன். அப்பொழுது மகா பிரகாசமான பரிசுத்தமான கைகளிலும், கால்களிலும் ஆணியால் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து எனக்கு காட்சியளித்தார். அவர் தமது மிகுந்த இரக்கத்தால் என்னிடத்தில் அன்பாக பேசி சில நிமிடங்கள் தேவன் வாசம் செய்யும் பரலோகத்தையும், அதின் மாட்சிமையையும் எனக்குக் காண்பித்தார். அந்த நாளிலிருந்து எனக்கு சமாதானம், சந்தோஷம் உண்டானது. இதை கேள்விப்பட்ட என் உறவினர்கள் எனக்கு தரவேண்டிய சொத்துக் களை தராமல் வீட்டை விட்டு வெளியேற்றினார்கள். ஆனாலும் இயேசு என்னை கைவிடவில்லை. இன்றைக்கு நானும் என் பிள்ளைகளும் கிறிஸ்து இயேசுவை ஆராதித்துக் கொண்டு சந்தோஷமாக இருக்கிறோம் என்று கூறினார். அது எனக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது.

புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் இருபதாயிரம் பேருக்கு (ஐயாயிரம் புருஷர்) பகிர்ந்து கொடுத்தார். அவர்கள் வயிராற உண்டனர். ஆச்சரிய மாய் இருக்கிறது அல்லவா? மார்த்தாள், மரியாள் தன் சகோதரன் இறந்ததினால் கலங்கிப்போய் இருந்தனர். இயேசு அவர்களை தேடி வந்தார். நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று கூறி அவர்களை தேற்றுகிறார்.இறந்து போன லாசருவை நான்கு நாட்கள் கழித்து இயேசு உயிரோடு எழுப்புகிறார்.

இயேசுவை போல நாம் பாடுபட வேண்டி யிருந்தாலும், சீஷர்கள் மற்றும் விசுவாசிகளை போல இரத்த சாட்சிகளாக மரிக்க நேர்ந்தாலும் அல்லது யோபை போல எல்லாவற்றையும் இழந்தாலும், ஜீவனுள்ள கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசம் நமக்கு குறையவே கூடாது. ஏனென்றால் உண்மையான தேவன் தம்முடைய தூதர்களோடும், இயேசுவோடும் பரலோகத்தின் மகிமையான, நித்திய வாழ்வை நமக்கு தரும்படி காத்திருக்கிறார் என்பதை நாம் கடைசி வரைக்கும் உறுதியாக நம்ப வேண்டும். எசேக்கியா ராஜா தன்னிடத்தில் ஒரு பலம் இல்லாதிருந்தும், தன்னை எதிர்த்த மகா படைபலம் மிக்க சனகெரிப்பை கண்டு அஞ்சாமல் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் தன் விசுவாசத்தை வைத்தான். அவனை போல முன்னும் பின்னும் இஸ்ரவேலில் தோன்றிய எந்த ராஜாவும் அப்படிப்பட்ட நம்பிக்கையை வைக்கவில்லை என்று **2 ராஜாக்கள் 18:5** சொல்கிறது. நாமும் இயேசுவை குறித்து பேசும் பொழுதும், அவர் மேல் உறுதியான நம்பிக்கையை வைக்கும் பொழுதும், சீஷர்கள் காலத்தில் நடந்த அற்புத, அடையாளங்கள் இன்றும் நடைபெற்று வருகிறது.

ஆம் பிரியமானவர்களே! இயேசு இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். அவர் அன்றைக்கு செய்த அற்புதங்களை இன்றைக்கும் செய்கிறார். அவர் நமக்காக சிந்தின பரிசுத்த இரத்தம் தான் நம்மை சகல பாவங்களிலிருந்தும் விடுவிக்கும். எப்படிப்பட்ட வியாதியிலிருந்தும் நம்மை சுகமாக்க முடியும். ஒருவேளை நீங்கள் தீராத வியாதியின் பிடியினால் அதிக கஷ்டப்படலாம். வேலை யில்லாமல் தவிக்கலாம். திருமணத்திற்கு ஏற்ற துணை கிடைக்காமல் கலங்கலாம். குழந்தை பாக்கியம் இல்லாமல் சோர்ந்துப்போய் காணப்படலாம். இவை ஒன்றுக்கும் கலங்காதீர்கள்! இயேசுகிறிஸ்து மீது ஆழ்ந்த அன்பு, உறுதியான விசுவாசத்தை வையுங்கள். அப்பொழுது நிச்சயமாய் அவர் உங்கள் மத்தியில் வருவார். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, பரிசுத்த ஆவியானவராக இன்றும் நம் மத்தியில் இருக்கிறார் **(1யோவான் 3:24).** எனவே, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அசட்டை செய்யாமல் அதை நிறைவாக பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள், உங்கள் மூலமாக மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

## சத்திய வேத வசனத்தின்மேல் ஆழமான விசுவாசம்

கடைசியாக, அவருடைய சத்திய வார்த் தைகள் மேல் விசுவாசமாயிருங்கள். வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் தேவன் நமக்கு செய்த உடன்படிக்கைகளும், தரிசனங்களும், வாக்குத் தத்தங்களும் ஒரு நாளும் மாறாது, ஒழிந்து போகாது. நமக்கு முன்னால் தேவனுக்காக வல்லமையாக பயன் படுத்தப்பட்ட தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், நீதிமான்கள், தேவ ஊழியக்காரர்களுடைய மகத்துவ மான வாழ்க்கையை நாம் படித்து, அவர்களைப் போல நாமும் வாழமுடியும் என்று விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்துவுக்காக வைராக்கியமாக வாழ்ந்த பல தேவ பிள்ளைகளைக் குறித்து நாம் படித்திருப்போம். தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, வேத வசனத்தின் மூலமாய் நம்மையும் ஆச்சரியமாக பயன்படுத்த முடியும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

தாவீது கர்த்தருடைய வேதத்தை நேசித்த படியால் கர்த்தர் அவனை விசேஷித்த விதமாய் உயர்த்தினார். வேதத்தை ஆழ்ந்து படிக்கும்பொழுது நம்முடைய விசுவாசம் அதிகமாய் பெருகும். விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். **(ரோமர் 10: 17)** அவரை அதிகமாய் ஸ்தோத்தரிக்கும் பொழுது, ஜெபம் செய்யும் பொழுது வருகிற விசுவாசத்தை காட்டிலும் பரிசுத்த வேதாகமத்தை, அதில் எழுதப்

பட்ட மகத்துவமான காரியங்களை நாம் நம்பும் பொழுது கர்த்தர் அவற்றின்படி நம்மை ஆசீர் வதிப்பார். எனவே வேதத்தை வாசியுங்கள், அது மிகவும் முக்கியம். வேதத்தை கர்த்தர் உங்கள் இதயத்தில் எழுதி வைக்க வேண்டும் என்று ஜெபியுங்கள். கர்த்தரோடு செலவழிக்கு தனி ஜெபமும், வேத வாசிப்பும், அபிஷேக நிறைவும் மிகவும் முக்கியம். அதை எப்பொழுதும் மறவாதீர்கள்.

**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் - 1 யோவான் 5 : 4**

**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.**

**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமா யிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள் - எபிரெயர் 11: 6,1,2**

என்னுடைய 38 ஆண்டு கால ஊழியத்தில் தேவன் தாமே செய்த மகத்தான அற்புதங்களை இங்கு கூறுகிறேன். இவை உங்கள் விசுவாசத்தை தட்டி எழுப்ப உதவியாக இருக்கும். இயேசுவின் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

இயேசுகிறிஸ்துவின் உன்னத அன்பைக் குறித்தும், அவருடைய சிலுவை மரணத்தைக்குறித்தும் நாம் பேசும் பொழுது ஏராளமான மக்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பை பெறுகிறார்கள். இரட்சிப்பு தான் மிகப்பெரிய அற்புதம். பிசாசினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் இயேசு கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் விடுதலை அடைந்துள்ளார்கள். மந்திரவாதிகள் இதனை கண்டு இயேசுவின் இரட்சிப்பை பெற வேண்டும் என்று காத்திருந்தனர்.

ராஜேஸ்வரி என்ற சகோதரி, தன் வீட்டின் வறுமை நிலையை தாங்க முடியாமல் தற்கொலைக்கு முயன்ற வேளையில் அவளுடைய மகன் சரவணன் அன்பரின் ஊழியப் பத்திரிக்கையை காண்பித்தான். **"தற்கொலை செய்யாதே இயேசு வருவார், நிச்சயம் உன்னை காப்பாற்றுவார்"** என்ற வரிகளை படித்து, அப்படியே இயேசுவை நோக்கி கதறி அழுதனர். ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்து அவர்களுக்கு காட்சியளித்தார். அப்பொழுது வெறும் பானையில் அரிசி மற்றும் எண்ணெய், தேவையான பணத்தை மிகுதியாககொடுத்து கர்த்தர் ஆசீர்வதித்தார். முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய வயோதிப கல்வி திட்டத்தில் ராஜேஸ்வரி சேர்ந்து நன்கு படித்து ஆசிரியர் ஆனார். அதுவரைக்கும் அவர்கள் வீட்டு பானையில் மா குறையவில்லை, எண்ணெய் குறையவுமில்லை, மணிபர்ஸில் பணம் குறையவுமில்லை (ஐந்து வருடத்திற்கு) இது நடந்த ஒரு உண்மை.

கனகா என்கிற மகளுக்கு கர்ப்பப்பை மற்றும் இனப்பெருக்க உறுப்புக்கள் கேன்ஸரால் பாதிக்கப் பட்டது. அறுவைசிகிச்சை மூலம் உடனே அவைகள் எடுக்கப்பட்டன். அந்த மகளுக்காக ஜெபித்தப் பொழுது அத்தனை உறுப்புகளும் புதிதாக உருவாகி, கிரேஸ் என்னும் பெண் குழந்தை பிறக்கும்படியும் கர்த்தர் அற்புதம் செய்தார். (இது நமது கூட்டங்களில் பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசனமாக வெளிப் படுத்தியது). பலருடைய கேன்ஸர் கட்டிகள் விழுந்தன. சிறுநீரக செயலிழப்புகள் சரியாயின. வேலையில்லாமல் கஷ்டப்பட்ட பலருக்கு ஜெபித்த வுடன் கர்த்தர் வேலையை கொடுத்தார்.

ஜட்சன் என்பவர் செய்து வந்த வியாபாரத்தில் நான்கு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. அவர் வாழ்ந்த நாட்டின் அரசாங்க சட்டப்படி, நான்கு நாட்களில் சிறைக்கு போக வேண்டியவர். கண்ணீரோடு என்னிடத்தில் தன் நிலையை கூறினார். அப்பொழுது நான் அவருக்கு புதிய ஏற்பாட்டை கொடுத்து நான்கு நாட்கள் ஜூஸ் மாத்திரம் குடித்து, சுவிசேஷத்தை திரும்ப திரும்ப வாசியுங்கள் என்று கூறினேன். நான்காம் நாளில் அவரை கைது செய்யும் படி காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவு கொடுத்திருந்தது. ஆனால் நான்காம் நாளில் அதற்கு நேர் எதிர்மாறாக கர்த்தர் சொன்ன தீர்க்க தரிசனத்தின்படி முன்பின் தெரியாத ஒருவர் அவருடைய வங்கியில் 4.4 கோடி பணத்தை டெபாசிட் செய்திருந்தார். காவல்துறை வருவதற்கு பதிலாக வங்கி மேலாளர் அவர் வீட்டிற்கு வந்து எதிர்கால திட்டங் களை பற்றி பேசினார். இன்றைக்கு அவர் மிகப்பெரிய ஏற்றுமதி தொழில் செய்கிறார். இவ்வாறு ஊழியத்தில் தேவன் செய்த மகத்தான செயல்கள் எண்ணிலடங்காதவை.

- ★ இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.
- ★ எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
- ★ ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன் - மாற்கு 11:22 24
- ★ அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும் என்றார்கள்.
- ★ அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும் - லூக்கா 17: 5,6

இரண்டாம் நூற்றாண்டில் ஒரு ஒன்பது வயது சிறுமி ஜெபித்த போதும், ஆறாம் நூற்றாண்டில் குறிப்பிட்ட விசுவாசிகள் ஜெபித்த போதும் மலைகள் தன் இடத்தைவிட்டு சில மைல்கள் நகர்ந்து சென்றன என்று சரித்திரத்தில் வாசிக்கின்றோம். இப்படியாக சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனை அற்புதங்களும் இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தில் தான் நடக்கிறது. எனவே, பரிசுத்த ஆவியின் பெலத்துடன், ஆவியின் வரங்களை பெற்று, பிறருடைய கண்ணீரை துடைக்கும் பொழுது மாபெரும் எழுப்புதல் உங்கள் குடும்பத்திலும், ஆலயத்திலும், தேசத்திலும் நடக்கும். தேவனுக்கே மகிமை! கர்த்தர் தாமே உங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவாராக.

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள்**
**கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

# Praise Report - துதி அறிக்கை

## கொரோனா தொற்றிலிருந்து சுகம் பெற்றவர்கள்

*(1)* நான் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு *20.5.21*ல் தக்கலை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு ஏழு நாள் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டேன். ஆனாலும் காய்ச்சல் விட்டுவிட்டு வந்து கொண்டே இருந்தது. மிகவும் மனபாரத்தோடு இருந்த நான் மே மாதம் *30*ம் தேதி ஞாயிறு அன்று மாலை அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபிக்கக் கேட்டேன். ஒரு சகோதரி என் நிலைமையை கேட்டு எனக்காக ஜெபித்தார்கள். அதுமாத்திரமல்ல, சுகம் கிடைத்தால் ஊழியப் பணியை தாங்குவேன் என்று பொருத்தனையும் செய்தேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு மறுநாளே காய்ச்சல் நிற்கும் படி அற்புதம் செய்தார். எனது பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு அனுப்புகின்றேன்.

**- திரு. அருள்தாஸ், நாகர்கோவில்**

*(2) 15* நாட்கள் கொரோனா தொற்றில் பாதிக்கப்பட்டேன். அன்பரின் ஊழிய ஜெப மையத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை கேட்டு கர்த்தர் அற்புத சுகத்தை தந்தார். சுகம் தந்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!

**- திருமதி. பெட்ரிசியா, மதுரை**

*(3)* என் மகள் அனிதா கொரோனா தொற்றில் பாதிக்கப்பட்டு ஆக்ஸிஜன் அளவு *75* ஆக குறைந்தது. மகளின் நிலைமை மிகவும் கவலைக்கிடமானது. வாட்ஸ்அப்பில் அன்பரின் ஊழியத்தை தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டோம். கர்த்தர் அற்புத சுகத்தை அருளினார்.

**- திரு. சர்வின் இர்வின், சென்னை**

*(4)* எனது தங்கை கணவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்தார். ஆக்ஸிஜன் அளவு 70% என மருத்துவர்கள் கூறினார்கள். அரசாங்க மருத்துவமனையில் சேர்த்து வென்டிலேட்டர் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றனர். வேறொரு தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். அவர்களும் எங்களை அனுமதிக்க வில்லை. ஆனால் நாங்கள் அவருடைய உயிருக்கு என்ன ஆபத்து வந்தாலும் நாங்கள் பொறுப்பு என்று எழுதி கையெழுத்திட்டபடியால் அந்த மருத்துவமனையில் அட்மிட் செய்தார்கள். அதன்பிறகு அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்பு கொண்டு ஜெபித்தோம். ஜெபத்த அடுத்த நாளில் இருந்து ஆக்ஸிஜன் அளவு 70% என்பது 80%, 85% என அதிகரித்தது. மரித்து போவார்கள் என மருத்துவர்கள் கைவிட்ட எங்கள் சகோதரனை தேவன் உயிர் பெற செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

*(5)* எனது தந்தைக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு 85% Lungs செயல் இழந்தது. தந்தை மரித்து விடுவார் என்றே மருத்துவர்கள் கூறினார்கள். அன்பரின் ஊழிய ஜெப மையத்தில் எனது தந்தைக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதமாக தந்தை சுகமாகும்படி அற்புதம் செய்தார். இவ்வளவு பாதிக்கப்பட்ட ஒரு கொரோனா நோயாளி இந்த மருத்துவமனையில் பிழைத்தது இல்லை என்று மருத்துவர்களே கூறினார்கள். சுகம் தந்த தேவனை துதிக்கிறோம்.

**- Sis. கலைசெல்வி, சுசிந்திரம்**

## இருதய அடைப்பு ஜெபத்தினால் நீங்கியது!

எனக்கு இரத்த அழுத்தம் அதிகம் ஆனதால் கடந்த *4.8.21* முதல் *9.8.21* வரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். அப்பொழுது **Blood Test, ECG, ECHO, Scan** ஆகிய பரிசோதனைகள் செய்யப்பட்டது. இரத்த அடைப்பு இருக்கலாம் என்று மருத்துவர்கள்

கூறினார்கள். எனக்கு இருதய அடைப்பு இருக்கக் கூடாது என்பதற்காக தொலைபேசி மூலம் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டேன். ஜெபத்திற்கு பிறகு 12.8.21 அன்று TMT Test எடுத்து பார்த்த பொழுது இதயத்தில் அடைப்பு இல்லை என்று மருத்துவர்கள் கூறினார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு எனக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார். அவருக்கு கோடா கோடி ஸ்தோத்திரம். எனது பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழிய பணிகளுக்கு தருகின்றேன்.

**- திருமதி. எமிலி மரகதம், காங்கயம்**

## தொலைக்காட்சி நிகழ்ச்சி ஜெப வேளையில் கர்த்தர் கொடுத்த அற்புத சுகம்!

சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் இவைகளுக்கு மருந்து மாத்திரை எடுத்துக் கொண்டிருக்கும் எனக்கு கொரோனோ தொற்று ஏற்பட்டது. இருமல், சளி அதிகமாக இருந்தது. உணவு கொடுக்கவோ, மருந்து மாத்திரைகளை கொடுக்கவோ ஒருவரும் இல்லை. பிழைப்பேன் என்ற நம்பிக்கையற்றுப் போய்விட்டது. மிகவும் கஷ்டப்பட்டு தொலைக்காட்சியை இயக்கினேன். அந்த நேரம் **Dr.ஜேன் ஜாஷ்வா** அவர்கள் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களோடு இணைந்து ஜெபித்து, சுகம் கிடைத்தால் காணிக்கை தருவதாக பொருத்தனை செய்தேன். கர்த்தர் எனக்கு அற்புத சுகத்தை தந்தார். இப்பொழுது நான்கு மாதமாகி விட்டது. மருந்து மாத்திரை எடுத்துக் கொள்ளாமலேயே சர்க்கரை, இரத்த அழுத்தம் நார்மலாக உள்ளது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. அடைக்கலமேரி, தஞ்சாவூர்**

## பொருத்தனை ஜெபத்தை அங்கீகரித்து அற்புதம் செய்த தேவன்

என்னுடைய அக்கா சத்யா பல மாதங்களாக பயத்தினாலும், மனதில் சமாதானம் இல்லாமலும் கஷ்டப்பட்டார்கள். இந்த நிலையில் நான் அன்பரின் ஊழியத்திற்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்திருந்தேன். ஜெபத்தை கேட்ட தேவன் அக்காவிற்கு பரிபூரண விடுதலை கொடுத்தார்.

அக்கா சோனியா நீர்க்கட்டி, கல்லீரல் வீக்கம், சிறுநீரகத்தில் கல் என பலவித வியாதியினால் கஷ்டப்பட்டு கொண்டிருந்தார்கள். இவர்களுக்காக பொருத்தனை செய்து அன்பரின் ஊழியத்தில் சாட்சி எழுதுவதாக ஜெபித்திருந்தேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு எந்தவித பிரச்சனையும் இல்லாமல் வியாதிகளை நீக்கிப்போட்டு அக்காவிற்கு பரிபூரண சுகத்தை அருளினார். சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. சோபியா, திருநெல்வேலி**



முன் அட்டை உள்பக்கத்தொடர்ச்சி

இருந்தது, நடக்கக் கூட முடியாது. **சகோதரன் பரிசுத்த ஆவியானவர் தந்த மனதுருக்கத்தோடு கூட எல்லா பரிசோதனை முடிவுகளையும் பார்த்து எனது மனைவிக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார், அந்த நேரம் முதலே சுகம் கிடைக்க ஆரம்பித்து, ஒருசில நாளில் பரிபூரண சுகமானாள். அவள் இப்பொழுது எல்லா வேலையும் செய்கிறாள்.** கர்த்தர் மாபெரும் அற்புத சுகத்தை எனது மனைவிக்கு தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

நாங்கள் சாதாரண குடும்பத்தை சார்ந்தவர்கள். MNC Company-ல் வேலை செய்யும் என்னுடைய சம்பளம் எனது குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. எங்களுக்கென்று ஒரு வீடு வாங்கும் அளவிற்கு பண வசதியில்லை. இந்த நிலைமைகளை சற்றும் அறியாத சகோ. **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் எங்களுக்காக ஜெபித்து **"நிச்சயமாய் உங்களுக்கு மூன்று படுக்கை அறைகள் கொண்ட நல்லதொரு வீட்டை ஐதராபாத் பகுதியில் தேவன் கொடுப்பார்"** என்று தீர்க்கதரிசனமாக கூறினார்கள். எங்களால் இதை நம்பவே முடியவில்லை. என்ன ஆச்சரியம்! **டிசம்பர் மாதம் 2019ஆம் ஆண்டு ஜுலை மாதம் நாங்கள் ஐதராபாத்தில் FLAT (3 Bed Room) வாங்கும்படி கர்த்தர் அநுக்கிரகம் செய்தார். கர்த்தருக்கே மகிமை!**

2009-ம் ஆண்டில் என் தாய் சூசன்ன குமாரிக்கு மூளையில் கட்டி இருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்து அறுவை சிகிச்சை செய்தார்கள். சில வருடங்கள் நன்றாக இருந்தாலும் மீண்டும் அவர்களுக்கு தலையில் தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. பரிசோதனையில் மீண்டும் மூளையில் கட்டி ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் கூறினார்கள். **நாங்கள் உடனே தொலைப்பேசி மூலம் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை தொடர்புக்கொண்டு ஜெபித்துக் கொண்டோம். ஜெபத்திற்கு பிறகு எனது தாயாருக்கு இருந்த தலைவலி குணமானது. மூளையில் இருந்த கட்டியும் மறைந்தது. அற்புதம் செய்த தேவனை துதிக்கிறோம்.**


மேலும், அடிக்கடி எனது தாயார் தன்னுடைய சொப்பனங்களில் நாய்களை காண்பார். இதனால் தூக்கமே அவர்களுக்கு வருவதில்லை. பயங்கரமான செய்வினை அவர்களை தாக்கியது. அப்பா இறந்த பிறகு நாங்கள் அனைவரும் Panic Attack-ல் இருந்தோம். பயம் எங்களுக்குள் அதிகமாக இருந்தது. அந்த நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டத்தில் பங்குபெற்று ஜெபித்துக் கொண்டோம். **சகோதரன் செய்த வல்லமையான ஜெபத்தினால் பொல்லாத ஏவல், செய்வினை ஆவி எங்கள் குடும்பத்தை விட்டே ஓடிப்போயிற்று. இப்பொழுது அம்மா நன்றாக தூங்குகிறார்கள், ஆரோக்கியமாக இருக்கிறார்கள். எங்களைவிட்டு பயம் நீங்கியது.**

எனது இரண்டாவது மகனுக்கு (Joel Immanuel) ஆறு மாதமாக இருக்கும்பொழுது தொடர்ந்து வயிற்று வலியும், வயிற்றுப் போக்கும் ஏற்பட்டது. இதனால் அவன் எடை கூடவே இல்லை. அநேக மருத்துவமனைக்கு சென்றும் குணமாகவில்லை. அந்த நேரத்தில் எங்கள் பகுதியில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் தனி ஜெபம் வைத்திருந்தார்கள். அங்கு என் மகனை அழைத்து வந்து காண்பித்த பொழுது, சகோதரன் இதற்கான காரணத்தை கூறினார்கள். அதன்படி டெஸ்ட எடுத்த பொழுது அவனுக்கு **Lactose intolerance** இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதன்படி பாலை தவிர்த்து சோயா Product போன்றவற்றை கொடுக்க ஆரம்பித்தோம். மகன் எடை கூட ஆரம்பித்தான், நன்றாக வளர்ந்தான். வயிற்று வலியும் சுகமானது. இப்பொழுது எட்டு வயதாகிறது. நன்றாக இருக்கிறான்.

நான் வேலை பார்க்கும் இடத்தில் மூன்று பேர் என்னை எப்பொழுதும் குறை கூறிக் கொண்டே இருப்பார்கள். என் முன்னேற்றத்தை தடை செய்ய திட்டமிடுவார்கள். இவர்களால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை தனி ஜெபத்தில் சந்தித்து ஜெபித்த பொழுது சகோதரன் தீர்க்கதரிசனமாக **"நீ அந்த மூன்று நபர் நிமித்தம் யோசேப்பை போல கஷ்டப்படுகிறாய், மனங்கலங்காதே! கர்த்தர் அவர்களை மாற்றுவார், அவர்கள் முன்பாக உன் நிலையில் உயர்வை அருளுவார்"** என்றார்கள். அவர்கள் சொன்னபடியே எனக்கு தடைகள் நீங்கி எனது நிலை உயரும்படி சர்வவல்ல தேவன் கிருபை செய்தார்.

இப்படியாக கர்த்தர் பலத்த அற்புதங்களை எங்கள் குடும்பத்தில் அன்பரின் ஊழியத்தின் மூலம் செய்துள்ளார். நாங்கள் தொடர்ந்து அன்பரின் ஊழியத்திற்காக ஜெபிக்கிறோம், ஊழியப் பணிகளை எங்களது காணிக்கையினால் மனதார தாங்குகிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**Bro. Prashanth, Hyderabad**



# போதகர் கிறிஸ்டியன் ப்ரெட்ரிக் ஸ்வார்ட்ஸ் (1726-1798)

இந்திய நாட்டைத் தேடி பல மிஷனெரிகள் வந்தாலும், சி.எப். ஸ்வார்ட்ஸ் அவர்கள் தமிழ் நாட்டு மக்களின் மனதில் நன்கு பதிந்த ஒரு சிறப்பான மிஷனெரி. அவரைப் பற்றிய பல சுவாரஸ்யமான தகவல்களை இங்கு பார்ப்போம்.

வேதத்தில் அன்னாள் சாமுவேலை கர்த்தருக்கு என்று பொருத்தனை செய்து கொடுத்ததுப் போல இவருடைய தாயாரும் ஸ்வார்ட்ஸ் ஐ கர்த்தருடைய ஊழியத்திற்கு என்று பொருத்தனை செய்து ஜெபித்திருக்கிறார்கள். தாயார் இறக்கும் தருவாயில், தன் கணவரிடம் மகனை கர்த்தருடைய ஊழியக்காரனாகவே வளர்க்கவேண்டும் என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டு உயிர் துறந்தார்.

தந்தையும் தன் மகன் ஸ்வார்ட்ஸ்-க்கு தன்னலத்தை துறந்து எப்படி எளிமையாக வாழ வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். தொடர்ந்து கர்த்தருடைய வழியில் கண்ணும் கருத்துமாக அவரை வளர்த்தார். 1746ஆம் ஆண்டு ஸ்வார்ட்ஸ், ஹாலே பட்டணத்தில் உள்ள அனாதை இல்லத்தின் இலக்கணப் பள்ளியில் படிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஹாலேக்குச் சென்றார். அங்கு மாலையில் நடைபெறும் ஜெபக் கூட்டங்களில் உதவி செய்யும்படியாக நியமிக்கப்பட்டார். ஸ்வார்ட்ஸ்-ன் நன் நடத்தைகளைக் கண்டு அங்கிருந்த பேராசிரியர் ஃப்ராங்கே, ஸ்வார்ட்ஸை நன்கு வழி நடத்தவும், பயிற்றுவிக்கவும் தொடங்கினார்.

இந்தியாவில் தமிழ்நாட்டின் மிஷனரியாகப் பணியாற்றிய போதகர் பெஞ்சமின் ஷுல்ட்ஸ், ஹாலே பல்கலைக்கழகத்தில் தமிழ் வேதாகமத்தை அச்சிடுவதற்கு முயன்று கொண்டிருந்தார். இந்தப் பணிக்கென்று உதவியாயிருக்கும்படியாக ஸ்வார்ட்ஸ் தமிழைக் கற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் பட்டார். இப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில், பேராசிரியர் ஃப்ராங்கே, ஸ்வார்ட்ஸ் அவர்கள் இந்தியாவிற்கு மிஷனரியாகச் செல்லும்படி வற்புறுத்தினார்.

## இந்தியாவிற்கு வருகை

1750ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் நாள் ஸ்வார்ட்ஸும் அவரது கூட்டாளிகளும் இங்கிலாந்தி லிருந்து கப்பலில் புறப்பட்டனர். அப்பயணம் அவர்களுக்கு மிகவும் கடினமானதாகவும் ஆபத்து நிறைந்ததாகவும் நீண்டநாள் பயணமாகவும் இருந்தது. ஜுலை மாதம் 24ம் நாள் டேனிஸ் மிஷனரி திரு.வியெடெப்ரோக் தரங்கம்பாடிக்கு இவர்களை அழைத்து சென்றார். தனது சொந்த தேசத்தையும், தனது தகப்பனாருடைய வீட்டையும் மறந்து விட்டு கிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு ஆயத்தமானார் ஸ்வார்ட்ஸ்.

## பள்ளிகளை ஆரம்பித்தல்

தேவனுடைய வார்த்தையின் அறிவை பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு சிறந்த வழி, பள்ளிகளை ஆரம்பிப்பதே என்று ஸ்வார்ட்ஸ் நம்பினார். அதற்காக மிகச் சிறிய சிற்றாலயம் மற்றும் பள்ளியை 1762ல் கட்டினார். 1784ல் ஸ்வார்ட்ஸின் நண்பரான திரு. சல்லிவன் ஒவ்வொரு மாகாணத் திலும் ஒவ்வொரு பள்ளியை ஆரம்பிக்கும்படியான ஆலோசனையைக் கொடுத்தார். அப்படிதான் 1762ல் திருச்சிராப்பள்ளியில் பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி துவங்கப்பட்டது.

1785ல் இராமநாதபுரத்திலும், 1790ல் கும்ப கோணத்திலும் மாகாணப் பள்ளிதொடங்கப்பட்டது. இராமநாதபுரத்திலுள்ள ஸ்வார்ட்ஸ் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தவர் அய்யாதுரை சால மோன் அவர்கள். முன்னால் ஜனாதிபதியாயிருந்த திரு. அப்துல்கலாமிடம் அதிக உரிமையோடு பழகி, கல்வியின் அவசியத்தை அவருக்கு கற்றுக் கொடுத்தார்.

தமிழைக் கற்றுக் கொண்டதும் ஸ்வார்ட்ஸ், இந்திய தேசத்துப் புராணங்களை வாசிப்பதில் ஐந்து ஆண்டுகளைச் செலவு செய்தார். அவர் எந்தநேரமும் தமிழர்களின் பிரியமான புத்தகத்திலிருந்தும், சரித்திரங்களிலிருந்தும் எடுத்துக் காட்டுகளை கூறுவதன்மூலம் மக்களது கவனத்தை ஈர்க்கக் கூடியவராக இருந்தார். அத்துடன் ஸ்வார்ட்ஸ் போர்ச்சுகீசிய மொழி, ஆங்கிலம், உருதுமொழி, பாரசீக மொழியையும் கற்றுக் கொண்டார்.

## திருச்சபைகளை நிறுவுதல்

தமிழ்நாட்டில் திருச்சபையை நிறுவுவதற்கான உறுதியான அஸ்திபாரத்தை அமைத்து, தொடர்ந்து தரங்கம்பாடி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் இலங்கையிலும்48 ஆண்டுகள் பணியாற்றினார். இந்திய தேசமானது சுவிசேஷத்தின் இரட்சிக்கும் வல்லமைக்குக் கீழாகக் கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கை எனக்கு தினமும் அதிகரிக்கிறது. ஆனால் அந்த மாற்றத்தை காண நான் உயிரோடிருப்பேனா என்பதைக் கர்த்தர் அறிவார். கிறிஸ்துவின் சேவையில் ஈடுபட வாலிப மக்களைப் பயிற்றுவிப்பதேஎன் முதன்மையான அக்கறை யாயிருக்கிறது என்று கூறியதோடு அதை செயலிலும் செய்துகாட்டினார்.

## மன்னர்களுடன் நட்பு

கர்நாடக நவாபான முகமதுஅலி மற்றும் 1769ஆம் ஆண்டில் தஞ்சை மன்னரான துல்ஜாஜி இவர்களுடன் ஸ்வார்ட்ஸுக்கு நெருங்கிய நட்பு இருந்தது. மன்னரின் சகோதரனானஅமீர்சிங்கும் மன்னரான துல்ஜாஜியும் ஒருபோதும் நல்லுறவுடன் வாழ்ந்ததில்லை. அமீர்சிங் நாட்டையும் செரபோஜியையும் பாதுகாக்க நியமிக்கப்பட்டார். இளவரசனையும், முன்னாள் அரசருடைய விதவை களையும் அமீர்சிங் கொடுமைப்படுத்த தொடங்கினார். ஸ்வார்ட்ஸ் இதை அரசாங்கத்திடம் கூறினார். இதை கேள்வியுற்ற ராஜா கோபமடைந்தார். ஸ்வார்ட்ஸ் ஒருபெரிய, இருண்ட அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சிறுவனான செரபோஜி ஒரு விளக்கின் வெளிச்சத்தின் கீழ் அமர்ந் திருப்பதைக் அங்கே கண்டார். சிறுவனை தேற்றி, இவனுக்கு கற்றுக் கொடுக்கயாராவது ஒருவர் இருந்தார்களா என்று கேட்டார். செரபோஜி தன் தலையை உயர்த்தி ஒருவரும் எனக்குக் கற்றுக் கொடுக்காததால் எனக்கு ஒரு எழுத்தும் தெரியாது என்றான். ஸ்வார்ட்ஸின் ஆலோசனைபடி ஒரு சிறந்த ஆசிரியரால் தாய்மொழியையும், ஆங்கிலத்தையும் செரபோஜி கற்றுக்கொண்டான்.

விரைவில் தமிழ், தெலுங்கு, உருது, சமஸ்கிருதம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கு, டச்சு மற்றும் லத்தீன் ஆகிய மொழிகளை நன்கு கற்று 1798ல் அவர் தஞ்சாவூரின் மன்னரானார். தஞ்சாவூரை ஆண்ட மாபெரும் அரசர்களில் ஒருவராக திகழ்ந்தார்.

## வாழ்வின் இறுதிகட்டம்

1798ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ம் நாள் ஸ்வார்ட்ஸ் மிகவும் சுகவீனமாக இருந்தார். அவரது இடதுகாலில் ஏற்பட்டவியாதியின் நிமித்தம் அதிக வேதனை அடைந்தார். 1798ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் நாள் இந்த அன்பான நல்லமனிதர் கர்த்தரோடு இருக்கும்படி சென்றுவிட்டார். அவருடைய தோட்டத்தில் ஆவலுடன் காத்திருந்த மக்கள், தங்களுக்குப் போதிப்பவராகவும், ஆறுதல் அளிப்பவராகவும், பாதுகாவலராகவும், நலம் விரும்பு பவராகவும், ஆலோசகராகவும், பரிந்து ஜெபிப்ப வராகவும் இருந்த வரை இழந்து விட்டோமே என்று எண்ணி அழுதனர்.

தஞ்சை மன்னரான செரபோஜி வந்து அழுது, கல்லறை வரை வந்தார். அரசரே கீழ்க்கண்டவரிகளை எழுதி, ஸ்வார்ட்ஸ் அவர்களின் கல்லறையை மூடும் கல்லில் பதித்து, மிஷன் தோட்டத்திலிருந்த சிற்றாலயத்தின் பலிபீடத்தின் முன் வைத்தார்.

"நீர் உறுதியாகவும், தாழ்மையும் ஞான முள்ளவராகவும், நேர்மை, தூய்மை, மாய்மால மின்மை போன்ற குணங்களுடையவராகவும், அநாதைகளுக்கு தகப்பனாகவும், விதவையின் ஆதர வாளராகவும், துக்கத்தில் சகலவித ஆறுதலாகவும் இருந்தீர். இருளால் சூழப்பட்டவர்களுக்கு ஒளியை வழங்குபவராகவும், சரியானது எதுவோ அதையே பிறருக்குக் காண்பித்து வந்தவராகவும் இருந்தீர். அரசர்களுக்கும், மக்களுக்கும், எனக்கும் ஆசீர்வாதமாக இருந்த என் தகப்பனே அனைத்துக்கும் நீர் தகுதியுள்ளவர். வாழ்த்தி ஜெபிக்கிறேன்.

உமது செரபோஜி!



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள். - ஏசாயா 1:17

தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் - உபாகமம் 15:11

அன்பும், மனதுருக்கமும் நிறைந்த மகத்துவமுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் SJ Saves Trust- பங்காளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். கர்த்தர் தாமே உலக வாழ்க்கையிலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் உங்களை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

அப்போஸ்தலானாகிய பவுல் சீஷர்களையும், பேதுருவையும் பார்க்கும்பொழுது கிறிஸ்தவர்களின் சத்துருவாகிய தன்னைஎப்படி இயேசுவின் தரிசனம் மாற்றினது என்பதையும், வரங்களை கொடுத்து பல நாடுகளில், புறஜாதியாருக்குள் கர்த்தர் தம்மை வல்லமையாக பயன்படுத்தியதையும் குறித்து கூறுகிறார். **(அப். 9:1-27; ரோமர் 15:16)** சிலுவையில் அறைந்த இயேசுகிறிஸ்து தமக்கு ஒரே முறை காட்சியளித்து கொடிய கொலைகாரனாகிய சவுலை மாற்றியதை அறிந்து, கிறிஸ்துவின் சீடர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு மிகவும் சந்தோஷமடைந்து தேவனை துதித்தார்கள். மனந்திரும்பிய பவுலிடம் மூத்த சீடர்களாகிய யாக்கோபு மற்றும் இயேசுவின் தலைமை அப்போஸ்தலர்கள் **"தரித்திரரை மாத்திரம் நினைத்துகொள்ளுங்கள்"** என்று கூறுகிறார்கள். **(கலாத்தியர் 2:10).** அதன்படியே, ஏழ்மையில் இருந்த மக்களுக்கு அதிகமாய் உதவி செய்வதை நாம் காண்கிறோம். பவுலை தேவன் ஒன்பது வரங்களால் நிரப்பி பல நாடுகளில் வல்லமையாக பயன் படுத்தியதோடு அவர் சென்ற இடமெல்லாம் மிகப்பெரிய எழுப்புதலை கட்டளையிட்டார். சபைகள் சமாதானம் பெற்று வளர்ந்தன. ஒரு பக்கம் அவர் வல்லமையான ஊழியம் செய்தாலும், மறுபக்கம் தரித்திரருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் இருந்தது.

கர்த்தர் பவுலுக்கு சீஷர்கள் மூலம் கூறின அறிவுரையை நமக்கும் கூறுகிறார். நாம் அடிக்கடி உபவாசம் எடுக்கும் பொழுது நம்முடைய ஜெபங்கள் ஏன் கேட்கப்படாமல் போகிறது என்று கேட்கலாம். ஆனால் கர்த்தர்,

**மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?**

**அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும்,**

**பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்"** என **ஏசாயா 58ஆம் அதிகாரம் 5 -7** வசனங்களில் கூறுகிறார்.

ஆம் எனக்குப் பிரியமான பங்காளர்களே! நீங்களும், நாங்களும் சேர்ந்து தரித்திராகிய சிறு பிள்ளைகளுக்கும், மிகவும் எளிமையான விதவைகளுக்கும், வயதான பெரியோர்களுக்கும் செய்யும்

உதவி, பரலோகத்தில் கணக்கிடப்பட்டு அதற்கான பலனை நிச்சயம் நாம் பெறுவோம். **பிரசங்கி 11:1ன்** படி நாம் நம்முடைய நன்கொடைகள் மூலம் அநேக ஏழைகளுக்கு உதவி செய்யும் பொழுது பல நாட்கள் கழித்து அதின் பலனை காண்போம். வேதத்தில் தண்ணீர் என்பது இந்த இடத்தில் எளிய மக்களை குறிப்பிடுகிறது. நான் சம்பாதிக்க துவங்கிய நாள் முதற்கொண்டு இதுவரைக்கும் என்னுடைய எண்ணமெல்லாம் படிக்க வசதி இல்லாத பிள்ளைகள் மீது, பசி பட்டினியால் வாடும் பிள்ளைகள் மீது, பெற்றோர்கள் இல்லாத, கைவிடப்பட்ட சிறு பிள்ளைகள் மீது எப்பொழுதும் இருக்கும். அதனால் மிகுந்த கரிசனையோடு, உங்கள் ஆதரவோடு உதவி செய்கின்றேன். ஏழை பிள்ளைகள் என்னைப் பார்க்கும்போது அன்போடுகூட தாத்தா எனக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்பார்கள். நாம் உதவி செய்கிற கிராமங்களில் எந்த ஏழை பிள்ளைகளுக்கும் செல்போன், வாட்ஸ்அப் வசதி கிடையாது.

**மோனிகா என்னும் ஏழு வயது சிறுமிக்கு அவள் ஒன்றரை வயதாக இருக்கும்பொழுது கண்களில் கேன்ஸர் ஏற்பட்டதால் இரண்டு கண்களையும் மருத்துவர்கள் உடனடியாக அகற்றி விட்டார்கள். அந்த பிள்ளையால் சிறிதேனும் பார்க்க முடியாது. அவளது கண் குழியில் பிளாஸ்டிக் கண்களை பொருத்தி உள்ளனர். அதுவுமல்லாமல், இன்னொரு சிறுமிக்கு பிறவியிலேயே காது கேட்காது, வாய் பேச முடியாது. அநேக பிள்ளை களுக்கு அப்பா அல்லது அம்மா இல்லாமல் தவிக்கிறார்கள். சிலருக்கு தாய் தகப்பன் இருந்தாலும் வறுமையால் தகப்பன் வீட்டை விட்டு வேறுபக்கம் போய்விடுவார். தாய் கஷ்டப்பட்டு அந்த பிள்ளைக்கு உதவி செய்கிறாள். ஆனால் அந்த தாயால் எவ்வளவேனும் வேலைக்கு போக முடியாது. ஏனென்றால் அந்த தாய்க்கு சிறுநீரகம் செயலற்று போயிருக்கும். டயாலிசிஸ் செய்ய வசதி இருக்காது. என் பிள்ளையை நீங்கள் வளர்ப்பீர்களா என்று என்னிடம் கண்ணீரோடு கேட்பார்கள்.**

பல சிறுவர், சிறுமிகள் ஆன்லைன் வகுப்புகள் நடத்தப்படுவதை காண முடியாமல் தவிக்கிறார்கள். எனவே, சிறு வயதிலேயே வேலைக்கு அனுப்பப் படுகிறார்கள். இவர்கள் கஷ்டமான வேலை செய்யும் கொத்தடிமையாக மாற்றப்பட்டபடியால் கொஞ்ச காலத்தில் பலவித வியாதிக்கு உட்பட்டு எதற்கும் வழியில்லாமல் வீட்டிலேயே படுத்த படுக்கையாகி விடுகின்றார்கள். இவர்களுக்கு படிப்பு என்பது துவக்கப் பள்ளியிலேயே (Primary School) நின்றுவிடுகிறது. இன்னும் சில பிள்ளைகள் தாய் தகப்பன் ஒழுங்காக இல்லாதபடியால் பலவிதமான கெட்ட வழியில் சிறு வயதிலேயே சென்று விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் உள்ள பிள்ளைகளை நான் நேரில் காண்கிறேன்.

எனவே பலவிதங்களில் இப்படிப்பட்ட குழந்தைகளை நல்ல வழிக்கு கொண்டு வரவே னுயல Care Tution Centre நடத்தி வருகின்றோம். இதில் இருக்கும் நமது ஆசிரியர்கள் மிகவும் உத்தமத் தோடும், உண்மையோடும் வேலை செய்கிறார்கள். கல்வி அறிவு குறைவாக இருக்கும் பிள்ளைகளையும் படிக்க வைத்து, அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும், படித்தால் தான் வாழ்வில் முன்னேற முடியும் என்பதையும் விளக்கி கூறி வழி நடத்துகின்றார்கள்.

**இந்த கொரோனா பாதிப்பின் காலத்தில் சுமார் 4,000-த்திற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் நமது அறக்கட்டளை மூலம் உதவி பெற்று சுகத்துடன் நன்றாக இருக்கிறார்கள். அரசு பள்ளிகள் கொரோனாவால் திறக்காமல் இருக்கிறபடியால் பிள்ளைகளுக்கு ஒருவேளை கிடைக்கும் சத்துணவு கூடகடந்த பல மாதங்களாக இல்லை.** இதனால் இப்பொழுது பிள்ளைகள் தாத்தா தயவுசெய்து ஆகாரம் கொடுங்கள் என்று கூறி அலை மோதுகிறார்கள். நமது ட்யூசன் மையத்தில் வரும் பிள்ளைகள் அனைவருக்கும் மாலை 4 மணிக்கு பிஸ்கெட் கொடுக்கிறோம். ட்யூசன் முடிந்து புறப்படும் பொழுது இரவு 8 மணிக்கு நல்ல உணவு தயார் செய்து கொடுக்கிறோம். இதனால் கிராமத்திலுள்ள அத்தனை பெரியவர்களும் நமக்கு ஆதரவு தருகின்றனர். இந்த அறப்பணிகளால் தேவனின் நாமம் மகிமைப்படுகிறது. தொடர்ந்து நாம் இந்த நற்பணியை மேற்கொள்வோம்.

அடுத்ததாக, நாம் செல்லும் கிராமங்களில் மிகுந்த வயதான ஏழை மூதாட்டிகள் மண்ணால் ஆன குடிசைகளில் வசிக்கிறார்கள். பலத்த மழை பெய்யும் பொழுது மண் சுவர் இடிந்து வீட்டிற்குள் பாம்பு, நட்டுவாக்கிளி மற்றும் தேள்கள் வருகின்றன. மேலும்,வயதானவர்கள் ஈரமான மண் தரையில் படுக்கின்றார்கள். இவர்களுக்கு யாரும் உதவ முன்வருவதில்லை. ஈர மண் தரையில் படுப்பதால் வாதநோய், நெஞ்சு வலி, காய்ச்சல் அவர்களுக்கு வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் இருந்த சுசிலா என்னும் ஏழை விதவைக்கு மழையால் சேதமடைந்த

மண்சுவரை எடுத்துப்போட்டு ஒரு சிறிய கான்கிரீட் வீடு கட்டி தரும்படி கர்த்தர் கிருபை செய்தார். அதற்காக தேவனை துதிப்போம். அந்த மூதாட்டி தனது வீடு புதிதாக கட்டபட்டபடியால் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். தொடர்ந்து இம்மாதிரி யான பணிகளுக்கு உங்கள் ஆதரவு கரத்தை நீட்டுங்கள், ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து நமது ட்யூசன் மையங்களில் படிக்கின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களின் நலன் கருதி பல ஆசிரியர்களை கொண்டு ட்யூசன் வகுப்புகள் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இதற்கு மாதத்திற்கு மொத்தம் **Rs.10,00,000/-** செலவாகிறது. இம்மட்டும் எங்களோடு துணை நின்று உதவுகின்ற உங்களுக்கு எங்களது நன்றிகளை தெரிவிக்கிறோம்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| **Bank A/c Name** | : | **SJ Saves Trust** |
| **Account No.** | : | **019150310875369** |
| **Bank Name** | : | **Tamil Nadu Mercantile Bank** |
| **Branch** | : | **Palakarai, Trichy.** |
| **IFS Code** | : | **TMBL0000019** |
| **A/c Type** | : | **Current** |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| **Bank A/c Name** | : | **SJ Saves Trust** |
| **Account No.** | : | **36477148891** |
| **Bank Name** | : | **State Bank of India** |
| **Branch** | : | **Cantonment, Trichy Main Branch** |
| **IFS Code** | : | **SBIN 0000930** |
| **A/c Type** | : | **Current** |

## IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு

## சுசிலா என்ற வயதான மூதாட்டிக்கு நமது SJ Saves Trust மூலம் வீடு கட்டிக்கொடுக்கப்பட்டது

### இடிந்த நிலையில் உள்ள வீடு







புதியதாக கட்டப்பட்ட வீட்டை சகோதரன் திறந்து வைக்கிறார்கள்



புதிய வீட்டின் தோற்றம்



# டவர் லைன், கவர்கல்பட்டி, MGR நகர், சக்தி நகர், காசிநகர், வேப்பிலைபட்டி, செல்லியம்மன் நகர், மன்னார்பாளையம்


















# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை பணிகள்

அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேற்றும்படி இப்படி நடந்தது. - மத்தேயு 8:16,17

அன்பான மருத்துவமனை பங்காளர்களே!

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் இருந்தபொழுது எங்கு சென்றாலும் பிணியாளிகளை சொஸ்தமாக்குவதையும், அசுத்த ஆவியால் பாதிக்கப்பட்டவர்களை தமது வார்த்தையால் விடுதலையாக்குவதையும், திமிர்வாதக்காரர்களை சுகப்படுத்துவதையும், குருடர்களை பார்வையடைய செய்வதையும், செவிடும் ஊமையுமான ஆவியுள்ளவர்களையும், நீர்க்கோவை வியாதியுள்ளவர்களை குணப்படுத்துகின்ற பணியையும் செய்து கொண்டே இருந்தார். இதனால் அவரிடத்தில் வந்த பலவிதமான வியாதியஸ்தர்கள், அவருடைய வஸ்திரத்தை தொடும் பொழுதே, அவரது நிழல் பட்ட மாத்திரத்தில் அல்லது அவருடைய வார்த்தையால் குணமானார்கள்.

**பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.**

**அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார்** - என்று **மத்தேயு 4 : 23, 24ல்** வேதம் கூறுகிறது.

சுகமளிக்கும் வரத்தையும், அற்புதங்களின் வரங்களையும் கர்த்தர் கிருபையாக எனக்குக் கொடுத்திருந்தாலும் எல்லோரும் நம்முடைய ஜெபத்தால், வார்த்தையால் சுகமடைவதில்லை. பலர் இயேசுவை பற்றி கேள்விப்படாதவர்கள் அல்லது சுவிசேஷத்தை கேட்க மனதில்லாதவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு ஏற்படும் நோய்களை, பல சமயங்களில் தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிற மக்களின் நோய்க்கு கர்த்தர் மனிதனுக்குக் கொடுத்த ஞானத்தை பயன்படுத்தி (Doctor's) மருத்துவ சிகிச்சை மூலம் குணமாக்குகிறார்கள். **யாத். 1:20ல்** கர்த்தர் மருத்துவச்சிகளை ஆசீர்வதித்தார்என்று பார்க்கிறோம். எனவே இந்த நல்ல பணிக்கு அவ்வப்பொழுது உங்கள் உதவிக்கரங்களை நீட்டி, நாளுக்குநாள் வளர்ந்து பெருக ஊக்கமாய் ஜெபியுங்கள்.

பொதுவாக கிராம மக்கள் அரசாங்க மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகளில் MBBS & MS படித்த மருத்துவர்களை அணுகுவதை பார்க்கிலும் மிகவும் சுலபமான வகையில் அந்த கிராமத்தில், மருத்துவம் படிக்காதவர்கள் தங்களுக்கு தெரிந்த ஊசி, மாத்திரை கொடுப்பதை அதிகமாக விரும்புகிறார்கள். இதனிமித்தம் உண்மையான படித்த நல்ல சர்வீஸ் உள்ள மருத்துவர்களை பணிக்கு அமர்த்தியும் அவர்களிடத்தில் வராதிருக்கிறார்கள். அவ்வப்போது ஏதாவது ஒரு மருந்து மாத்திரையில் காய்ச்சல், தலைவலி நின்றால் போதும் என்று நினைக்கிறார்கள். இத்தகைய குறுக்கு வழியால் நோயாளிகளின் சிறுநீரகம் பாதிக்கப்படும்

என்பதை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். எனவே சுற்றிலும் இருக்கிற கிராம மக்கள் சிறப்பான மருத்துவத்தை புரிந்து கொண்டு நன்கு படித்த மருத்துவரை கொண்டு செயல்படும் நமது மருத்துவமனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.

நமது மருத்துவமனையில் அநேக முன்னேற்றங்கள் செய்யவும் ஜெபியுங்கள். உடனடியாக எலும்பு முறிவு துறைக்கு ஒரு சிறிய அறுவை சிகிச்சை அரங்கம், ஒரு மினி தியேட்டர் மற்றும் அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் வாங்க வேண்டும். இதற்கான செலவு **Rs.50,00,000/-** டயமாள வரை ஆகும். உங்களில் ஒருசிலரை கர்த்தர் ஏவினால் தாங்குங்கள். உதவி செய்பவர்கள் உங்கள் தாராளமான காணிக்கை களை அனுப்புங்கள்.




## Employment Opportunity

## வேலை வாய்ப்புகள்


1) ***Accountant***
   ***B.Com., / M.Com., Graduates***
   *Skills Required : Tally ERP 9* பயன்படுத்த தெரிந்தவர்கள்
2) ***Prayer warriors :*** *Qualification +2/Any degree Born again Christian only*
3) ***Camera men with adequate experience***
   முன் அனுபவமுள்ள கேமராமேன்கள்
4) ***Video Editors***
5) ***Drivers***
6) ***Cooks***
7) ***House keepers***

**தகுந்த ஊதியம் கொடுக்கப்படும்**
***Apply to : info@mojindia.org***
**கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்**

**Telugu Whats App No: 91770 87860**



# உலகச் செய்திகள்



சவுதி அரேபியாவில் உள்ள பிரமாண்டமான ஒட்டக சிற்பம் வரலாற்றுக்கு முந்தைய கால கட்டத்தை சேர்ந்தது என கண்டறியப்பட்டுள்ளது. அல்ஜவ்ப் என்ற பாலைவனப் பகுதியில் கடந்த 2018ம் ஆண்டு பிரமாண்டமான ஒட்டக சிற்பம் கண்டு பிடிக்கப்பட்டது. இது சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என்று கணிக்கப் பட்டிருந்தது. இந்நிலையில் ஜோர்டானில் உள்ள பண்டைய நகரமான பெட்ராவில் உள்ள எச்சங்களும், ஒட்டக சிற்பமும் ஒத்து போயுள்ளது. எனவே, இந்த சிற்பம் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானதாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



துணியால் செய்யப்பட்ட முகக்கவசம், சாதாரண ஒற்றை அடுக்கு சர்ஜிக்கல் மாஸ்க், மூன்றடுக்கு முகக்கவசம் N95 முகக்கவசம் என பல வகைகளில் முகக்கவசங்கள் விற்பனைக்கு உள்ளன. துணியிலான முகக்கவசம் கொரோனா பரவுதலை பொறுத்தமட்டில் எந்த நற்பயனையும் தருவதில்லை. அதேபோல் சர்ஜிக்கல் மாஸ்க் எனும் ஒற்றை அடுக்கு முகக்கவசமும் முழுமையான பாதுகாப்பை தருவதில்லை.

மூன்றடுக்கு முகக்கவசமே முழுமையான பாதுகாப்பை தரும். பொதுமக்கள் மூன்றடுக்கு முகக்கவசம் அணிவதே போதுமானது. முழுப்பாதுகாப்பு அளிக்கும் மூன்றடுக்கு முகக்கவசம் தொடர்ச்சியாக 6 மணி நேரம் வரை பயன்படுத்தலாம். அதன்பின் அதனை சரியான முறையில் பாதுகாப்பாக உயிர்கழிவு மேலாண்மை திட்டத்தின் அறிவுறுத்தலின்படி கழிவு நீக்கம் செய்ய வேண்டும்.

ஒருமுறை பயன்படுத்திய மூன்றடுக்கு முகக்கவசத்தினை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது கூடாது. இவ்வாறு செய்யும்போது நோய் தொற்று மற்றும் பரவல் ஏற்படும் வாய்ப்புள்ளது. சுகாதாரத் துறை பணியாளர்கள் மற்றைய நோயாளர்களிடையே நேரடி தொடர்பில் இருப்பவர்கள் N95 வகை முகக்கவசங்கள் அணியலாம். பொதுமக்கள் அணிய வேண்டியதில்லை.



தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் தொடரில் தமிழக வீரர் சந்தோஷ்குமார் 2வது தங்கப் பதக்கம் வென்று அசத்தினார். தெலுங்கானா மாநிலம் வாரங்கல், நேரு ஸ்டேடியத்தில் நடைபெறும் இந்த தொடரில் பங்கேற்ற மதுரையை சேர்ந்த ராணுவ வீரரான சந்தோஷ்குமார் (23 வயது) கலப்பு தொடர் ஓட்டப்பிரிவில் தமிழக அணிக்கான தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்றார். அடுத்து ஆண்கள் 400 மீட்டர் தடை தாண்டி ஓட்டத்தில் களமிறங்கிய அவர் சர்வீசஸ் சாம்பியன் தவால் உதேகரின் சவாலை முறியடித்து தமிழகத்துக்காக 2வது தங்கப் பதக்கத்தை வென்று அசத்தினார். அவர் பந்தய தூரத்தை 50.79 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். ரயில்வேயின் ஜஷன்ஜோத் சிங் (51.23 விநாடி) வெள்ளிப் பதக்கமும், தவால் உதேகர் (51.49 வி) வெண்கலமும் வென்றார்.

# அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம் (Renovation) புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**HARVEST TV**
சனி இரவு 07.30 – 08.00

## Tamil Whats App No: 95004 87059

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month




சென்னையில் குடும்பங்களுக்கான ஆலோசனையும், ஜெபமும்

Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்து
ஆலோசனை பெற்று ஜெபிக்க வேண்டுமா? வாருங்கள்!

நாள் : அக்டோபர் 14 (வியாழக்கிழமை)

இடம் : YMCA, ரித்தர்டன் ரோடு,
வெப்பேரி, சென்னை.

நேரம் : காலை 9 முதல் 2 மணி வரை
மாலை 4 முதல் 9 மணி வரை

தொடர்புக்கு : 97907 01873 & 77081 53666, 0431 – 2765386

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:10 அக்டோபர் 2021 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 7 ISSUE NO : 10 October 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-







நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும்,
விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்.

*மாற்கு 9:23*